கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

# ஞான ஒளி

ஞான ஒளி GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

பக்கம் 05 தவக்கால நாட்காட்டி

பக்கம் 8-9 சுப்புவத் அரண தியான இல்லம்

பக்கம் 06 என் அருள் உனக்கு...




நற்செய்தியை நம்புங்கள்

02.03.2014 - (02 பங்குனி, 2014 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 04, கதிர் - 82 16 பக்கங்கள் ரூபா: 25.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD / 37 / NEWS / 2014

## "அவர் ஏழ்மையின் கோலம் பூண்டார், ஆகவே அவருடைய ஏழ்மையின் பொருட்டு நாம் செல்வரானோம்" [ 2கொரி 8:9]

## திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் தவக்காலச் செய்தியின் சாரம் - 2014

மேற்குறிப்பிட்ட தலைப்பின் கீழ் தமது தவக்காலச் செய்தியை வெளியிட்டுள்ள திருத்தந்தை முதலில் கிறிஸ்துவினால் நாம் பெறும் அருளைப் பற்றியும், பின்னர் அவ்வருளால் நிறைந்ததாக, எமது சாட்சிய வாழ்வு எவ்வாறு அமைய வேண்டுமெனவும் வலியுறுத்திப் பேசியுள்ளார். வறியோருடன் தன்னை இணைத்துக் கொள்வதே என் மனதுக்கு பிடித்தமான செயல் என்ற திருத்தந்தையின் கருத்து இவ்வருடத் தவக்காலத்திலும் மீண்டும் ஒரு முறை நம்மை சிந்திக்க அழைக்கின்றது. பங்குனி 5ஆம் திகதி விபூதிப் புதனோடு தொடங்கவிருக்கும் தவக்காலத்தில், திருத்தந்தை தனது பிறரன்புப் பணிகள் பற்றி குறிப்பிட்டார். பொருளாதார அடிப்படையிலும், நன்னெறியின் அடிப்படையிலும், ஆன்மீக அடிப்படையிலும் வறுமை இவ்வுலகில் பெருகி வருகிறது.

இறைவனுடன் கொள்ளும் உறவு மனித வாழ்வின் மிக அடிப்படையான உண்மை என்பதை இவ்வுலகம் மறுத்து, வேறு வழிகளில் மனிதர்களுக்கு மகிழ்ச்சியை உருவாக்க முயல்வது மனிதர்களை மேலும், வறுமைக்கும், வெறுமைக்கும், அழைத்துச் செல்கிறது என்று சுட்டிக் காட்டினார் திருத்தந்தை



ஆகவே இத்தவக்காலத்தில் வறியோருடன் பகிர்தலை ஏற்படுத்திக் கொள்ள இத்தவக்காலத்தை பயனுள்ளதாக்க நாம் வறியவர்களுடன் எம் உறவை ஏற்படுத்திக் கொள்வோம்.

# புதிய கர்தினால்கள்

***"திருச்சபைக்கு ஒன்றிப்பு, துணிச்சல், ஒத்துழைப்பு, செபம், என்பவற்றைக் கொடுங்கள்"***





கடந்த 22.02.2014 சனிக்கிழமையன்று புதிய கர்தினால் மார்களுக்கு சிவப்பு தொப்பி, மோதிரம், வழங்கப்படும் திருவழிபாடு புனித பேதுரு பசிலிக்காவில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மற்றும் ஓய்வுப்பெற்ற எமது முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களும் சேர்ந்து திருவழிபாட்டை நிறைவேற்றினர்.

18 புதிய கர்தினால்மார்களுக்கு சிவப்பு தொப்பி, மோதிரம் ஆகியவை இவ்வழிபாட்டில் அணியப்பட்டது. இத்திருவழிபாட்டில் உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் "கர்தினால்கள் திருச்சபைக்கு தேவைப்படுகின்றனர். எல்லா காலத்திலும், எல்லா நேரங்களிலும் நற்செய்தியை அறிவிப்பதற்கும் உண்மைக்கு சாட்சியம் அளிப்பதற்குமான அவர்களின் துணிச்சல், அவர்களின் ஒத்துழைப்பு இன்றும் சிறப்பாக திருத்தந்தையோடும், கர்தினால்களோடும் ஒன்றிப்பு, இறைமக்களுக்கான அவர்களின் செபம் போன்றவை தேவைப்படுகின்றன குறிப்பாக இக்காலத்தில் துன்பமும், வேதனையும் அனுபவிக்கும்....

தொடர்ச்சி பக்கம் – 15

## மாபெரும் திறந்த வெளி சிலுவைப் பாதை - தமிழில்

பல குருக்கள் ஒன்று சேர்ந்து கொழும்பு யோசேவ்வாஸ் மன்ற ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட திறந்தவெளி சிலுவைப் பாதை 09.03.2014 ஞாயிற்றுக்கிழமை அன்று பி.ப 3.00 மணிக்கு புனித வியாகுல மாதா ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமாகி கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலியுடன் நிறைவு பெறும். இத்தவக்கால திருநிகழ்வில் கலந்து ஆண்டவரின் திருப்பாடுகளைத் தியானிக்க அனைவரையும் அழைக்கின்றோம்.

தகவல் : எமில் பர்னாந்து



## புனித அலோசியஸ் சிறிய குருமடத்திற்கான விண்ணப்பப்படிவம்

கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் சுதேச குருவாக ஆண்டவருடைய திராட்சை தோட்டத்தில் ஊழியம் புரிய நீங்கள் அழைக்கப்படுகின்றீர்கள். இதற்கான விண்ணப்பப்படிவங்கள் உங்களுடைய பங்குத் தளங்களுக்கு பங்குனி 3ஆம் திகதி முதல் அனுப்பி வைக்கப்படும். 8ஆம் வருடம் கல்வி பயிலும் மாணவர்கள் சித்திரை 8ஆம் திகதிக்கு முன் உங்கள் பங்குத் தந்தையூடாக விண்ணப்பங்களை நிரப்பி அனுப்பி வைக்கவும்.

**தகவல் :**
**அருட்பணி. இயக்குனர்**
**புனித அலோசியஸ் சிறிய குருமடம்**

## மருத்துவர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கான விசேட ஒன்று கூடல்

வருகிற 7ஆம் திகதி மாலை 7.00 மணிக்கு பேராயர் இல்லத்தில் மருத்துவர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கான விசேட ஒன்று கூடல் எமது கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதி-மேதகு மெல்கம் ரஞ்சித் ஆண்டகையுடன் இடம் பெற இருப்பதால் கத்தோலிக்க மருத்துவர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் இவ்விசேட நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
அருட்தந்தை. சிசில் ஜோய் பெரேரா
தொ.பே. இல. 0777325255

## இத்தாலி வாழ் இலங்கை மக்களின் விசேட ஒன்றிப்பின் ஒளிபரப்பு

02.03.2014 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 3.00 மணிக்கு இலங்கை ரூபவாஹினி அலைவரிசையில் இவ்விசேட ஒன்றுகூடல் ஒளிபரப்பு செய்யப்படுகின்றது. இந்நிகழ்வானது கடந்த மாதம் 08ஆம் திகதி வத்திக்கான் புனித பேதுரு பேராலயத்தில் இடம் பெற்றது. இதன்போது நமது கர்தினால் தலைமைத்-தாங்கி திருப்பலி நிகழ்த்தியதோடு கிட்டத்தட்ட பன்னிரெண்டாயிரம் மக்கள் கூடியிருந்தனர். திருப்பலியின் பின்னர் திருத்தந்தை பிரான்சிஸ் மக்களை ஆசீர்வதித்து அவர்களுடன் உரையாடினார். இந்நிகழ்வானது ஒளிபரப்பு செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

## பொதுநிலையினருக்கான விசேட கூட்டம்

ஏற்கனவே அறிவித்ததின்படி பொதுநிலையினருக்கான விசேட கூட்டம் 01.03.2014 - சனிக்கிழமை அன்று பேராயர் இல்லத்தில் 3.00 மணிக்கு இடம்பெறும் என அறியத்தருகின்றோம்.

**"உன்னால் நன்மை செய்யக் கூடுமாயின், தேவைப்படுபவர்களுக்கு நன்மையைச் செய்ய மறுக்காதே"**

## புதுக்கடைப்பங்கின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டு வைபவம் -2014



புதுக்கடைப் பங்கின் புனித செபஸ்தியார் மறைப் -பாடசாலையின் தமிழ், சிங்கள, ஆங்கில மொழி மூலம் கல்விகற்கும் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டு வைபவம் மேற்படி பங்கு ஆலயத்தில் 23.02.2014ல் நடைபெற்றது. மறைப்பாடசாலையின் பொறுப்பாசிரியர் திரு. ஏ. ஏஸ். டானியல், பங்குத்தந்தை அருட்பணி. அகஸ்ரின் பர்னாந்து அடிகளாருடன் மாணவத் தலைவர்கள் படத்தில் இருப்பதை காணலாம்.

தகவல் : ஏ. எஸ். டானியல்

## குருசடித்தீவு புனித அந்தோனியார் ஆலய திறப்பு விழா

யாழ்ப்பாணம் பண்ணை வீதியின் வலப்பக்கம் அமைந்துள்ள குருசடித்தீவு புனித அந்தோனியார் ஆலயம் 1947ஆம் ஆண்டு அமரர் பெரியார் அந்தோனி இசிதோரால் கட்டப்பட்டு, வருடாந்த திருநாள் திருப்பலி நடைபெற்று வந்தன.

நாட்டில் ஏற்பட்ட கலவரத்தால் ஆலயம் அழிக்கப்பட்டது. நாவாந்துறை பங்கின் பங்குத்தந்தை அருட்திரு. பா.பி இராசசிங்கம் அடிகளாரின் பெரும் முயற்சியாலும் பங்குமக்களாலும் ஆலயம் புதிதாகப் புனரமைக்கப்பட்டு யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்திரநாயகம் ஆண்டகையால் 22.2.2014 சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு வழிபாடுகளுக்காகத் திறந்துவைக்கப்பட்டு ஆயரால் முதல் திருப்பலி ஒப்புக்கொடுப்பக்கபட்டது.

தகவல் : அமிர்தநாதர் நாவாந்துறை




சான்றோர்கள் உதித்த நல் சாவகச்சேரி தனில்
சத்தியத்தின் காவல் செய்
தூய லிகோரி பங்கு மண்ணில்
ஆன்றோர்கள் இம்மனுவேல் அன்னம்மாள்
தம்பதிகள் நனிமகிழ்ந்து பெற்றெடுத்த
நவமகள் அருள்மரியா வாழி!

அன்பொடு பண்பும் அறிவாற்றல்
பலவும் பெற்றுயர்ந்தே
ஆண்டவரின் அழகுமிகு கார்மேல்
மடச்சோலை தனில்
ஆசிரிய சேவையுடன் அருட்பணி வாழ்வும்
ஒன்றிடவே அகவை ஈர்பத்துடன் ஐந்து நண்ணும்
பேறுபெற்றீரே வாழி!

துள்ளித் திரியும் பள்ளிப் பருவமதில்
அறிவை அள்ளிப் பருகி அக்களித்தீர்
றிபேக் கல்லூரி தனில் பொருள் தேடும்
இவ்வுலகில் அருள்தேடும் வாழ்வை தேர்ந்து
வாஞ்சையோடு இணைந்தீர் அச்சுவேலி
திரேசா அகம் தனில்

கருவிலே உமைச் சுமந்த தாயின்
கனவை நனவாகிக்கிடவே
கருத்தூன்றிக் கற்றலொடு நற்பயிற்சி
பெற்றீர் பணிவாழ்விற்கு
கார்மேல் சபைச் சோலையில்
முகிழ்ந்த நல்மலராக அருட்சகோதரியானீரே!
ஆயிரத்து தொளாயிரத்தென்பத்தெட்டில்.

அறியாமை இருளகற்றும் ஆசிரியப் பணியதனை
ஆர்வத்துடன் ஏற்றிருந்தீர் தொண்ணூற்று
இரண்டு தனில் திருமறை செப்பியநல்
புளிக்காரம் போல - செயற்பட்டு நின்றீர்
திருமலை தூய மரியாள் கல்லூரி தனில்

இறை ஒருவரே போதுமானவர் என்ற
மறைவாக்கேற்று - உறுதியொடு உழைத்தீர்
தேற்றப்பளை கொல்பிட்டி சாலைகளில்
மருத்துவர் நோயுற்றவருக்கே உருத்தென்றெண்ணி
மாவத்தை தூய அந்தோனியார் பதி
கால் பதித்தீரே வாழி!

அறிவுப் பசி தீர்க்கும் அதிபராய்
வருகை தந்தேயாங்கு - வறிய சிறார்களின்
வயிற்றுப் பசி தீர்க்கும் அன்னையுமாய்
அல்லலுறும் பெற்றோருக்கும்
அகழ் வழி காட்டியங்கு - அல்லும் பகலும்
அயராது பணியாற்றுகின்றீரே வாழி!

தள்ளாடும் கட்டடத்தை தகர்த்தெறிந்து
குறைதீர்க்க நல்லோர்கள் உதவியுடன்
மும் மாடிக்கும் வித்திட்டீரே
கள்ளமின்றிச் சிறார்கள் நிதம்
களிப்புடனே கற்று ஏகும்
கண்கவர் கலைக்கூடமாக்கி வருகின்றீரே வாழி!

வெள்ளிவிழா கண்டிடவே நின்வழிபெற்ற
நற்சேவைகள் உள்ளமெல்லாம்
உவகையுடன் உயர்ந்திடவே
பொன்விழாவும் புனித மகள் நீர் பெற்று
பார் சிறந்திடவே பரமன் பதம் நிதம்
பணிந்தே வாழ்த்துகின்றோம்!

வாழிய வாழிய வாழியவே

**ஆக்கியோன்**
**செல்வி . டி. ஐ ஜோசப்**

**ஆசிரிய ஆலோசகர்**
**கொழும்பு, நீர்கொழும்பு வலயங்கள்**

## தவக்காலம் மற்றும் பாஸ்கு காலத்தை முன்னிட்டு நடைபெறும்
# சித்திரம் மற்றும் கட்டுரைப் போட்டிகள்

### மினி உதான தேசிய நத்தார் சஞ்சிகையின் அனுசரணையில்

இலங்கை நத்தார் வலைய வரலாற்றில் சிறுவர்களுக்கான இன்னும் ஒரு காலடியை அபிமானத்துடன் எடுத்து வைக்கின்றோம். தவக்கால மற்றும் பாஸ்கு காலத்திற்காக பிரதான நான்கு பிரிவுகளாக பிரித்து சித்திரம் மற்றும் கட்டுரைப் போட்டியொன்றை நடாத்த மின உதான தேசிய நத்தார் வலைய உத்தியோகத்தர்கள் ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

அகில இலங்கை ரீதியாக நடைபெறும் இப்போட்டி சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடைபெறவுள்ளதுடன், ஏதாவது ஒரு போட்டியில் 1ஆம், 2ஆம், 3ஆம் நிலைகளுக்கான பிரதான 12 நிலைகளை தெரிவு செய்து அவர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படுவதுடன் ஏதாவது ஒரு போட்டியில் 20 பேருக்கு மினி உதான மூலம் சிறப்பு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது. உங்கள் ஆக்கங்களில் உங்களுடைய விபரங்கள் எதுவும் குறிப்பிட வேண்டாம் உங்கள் பங்குக்-குருவானவரின் உறுதிப்பாட்டை மட்டும் உள்ளடக்கவும். உங்கள் முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், தரம், மறைக்கல்வி, தலைப்பு மற்றும் பங்கு ஆகியவற்றின் விபரங்களை வேறாக எழுதி ஆக்கங்களுடன் இணைத்து கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**ஏற்பாட்டாளர்**

**ஜோசப் ஜயசிரி பர்னாந்து**
**மருக்குமரி A. 179 / வ**
**மாதொல, அவிசாவலை**
**தொலைபேசி இலக்கம்**
**077 9211762**

**[இப்போட்களுக்கான விபரங்கள் 15ம் பக்கத்தில்]**



# உரோமாபுரியில் வெள்ளிவிழாக் காணும்
## அருட்பணி. ஜோர்ஜ் திசாநாயக்க

தகவல் : திருமதி ஆஞ்சலின் சுப்ரமணியம்

திருகோணமலை மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. ஜோர்ஜ் திசாநாயக்க தனது குருத்துவத்தின் ஆண்டு நிறைவை "Pontificio Collegio Filippino"ல் கொண்டாடவுள்ளார். 52 வருட வரலாற்றைக் கொண்ட "Pontificio Collegio Filippino"ல் முதன் முதலாக ஒரு குருத்துவ மாணவன் வெள்ளி விழாவைக் கொண்டாடுவது இதுவே முதற்தடவையாகும்.

அவரது நன்றித்திருப்பலி பங்குனி மாதம் 14ஆம் திகதி ஐந்து மொழிகளில் "Pontificio Collegio Filippino"ல் நடைபெறும். இலங்கையைச் சேர்ந்த மாணவ ஒன்றியமும் "Pontificio Collegio Filippino" மாணவ ஒன்றியமும் இணைந்து நடாத்தவுள்ள இந்நிகழ்வுக்கு இலங்கையை சேர்ந்த அருட்பணியாளர்களும், சமயப்பற்றுடைய பொதுநிலையினரும் தூய தோமஸ் அக்குவாயினஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அருட்பணியாளர்களும் சிறப்பிக்கவுள்ளனர். அருட்பணி. ஜோர்ஜ் திசாநாயக்க யாவருக்கும் அறிமுகமானவர். இவர் 1961ஆம் ஆண்டு மார்கழி மாதம் 13ஆம் திகதி கிழக்குமாகாணத்திலுள்ள யாத்திரை ஸ்தலமாகிய தூய செபமாலை மாதா ஆலயம் எழுந்தருளிய புல்லுமலையில் அவதரித்தார். இது அம்பாறை மாவட்ட எல்லையிலுள்ள ஒரு கிராமம். இக்கிராமம் மட்டக்களப்பு A5 வீதியில் அமைந்துள்ளது. தனது ஆரம்பக்கல்வியை இக்கிராமத்தில் அமைந்துள்ள பாடசாலையில் கற்றார். இவர் காலம் சென்ற பிரான்சிஸ் சேவியர் கிரிபண்டா திசாநாயக்க, மேரி அக்னஸ் என்பவர்களின் மகனாவார். இவர் திருகோணமலையிலுள்ள தூய சூசையப்பர் ஆரம்ப குருமடத்தில் 1977ல் சேர்ந்தார். அங்கு தழிழையும் சிங்களத்தையும் கற்றார்.

1981 - 1984ல் யாழ்நகரில் அமைந்துள்ள தூய பிரான்சிஸ் சேவியர் குருமடத்தில் மெய்யியல் கற்றார். அதன் பின்னர் மட்டுநகர் வித்துவான் FZC நடராசா மூலம் தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றார். 1985ல் தேசிய குருமடத்தில் சேர்ந்து இறையியல் கற்ற B.Th. Rome என்ற தகைமையையும் பெற்றார். 1989ஆம் ஆண்டு பங்குனி மாதம் 14ஆம் திகதி திருகோணமலை மட்டக்களப்பு மறைமவாட்ட அதிவந்தனைக்குரிய மேதகு ஜோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களால் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் பல ஆலயங்களின் பங்குத்தந்தையாக அளப்பரிய சேவைகள் ஆற்றி 2003 - 2012 ஆண்டு வரை தூய மரியாள் பேராலயத்தின் பங்குத் தந்தையாக பணியாற்றினார். அந்நாட்களில் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம், மறைக்கல்வி, திருவழிபாட்டு திருவிவிலிய பல்சமய உரையாடல் கிறிஸ்தவ ஒன்றிப்பு ஆணைக்குழுவிலும் பணியாற்றினார். அருங்கொடைப் பணிகளையும் அநேகமான நாடுகளுக்குச் சென்று நடாத்தினார். "அஸ்கிரிய மள்வத்த" பீடாதிபதியினால் முதன் முதலாக கத்தோலிக்க அருட்பணியாளர் ஜோர்ஜ் திசாநாயக்க அவர்களுக்கு 1994 - 2012ஆம் ஆண்டு யுத்த காலப்பகுதிகளில் பல்சமய ஒன்றிப்பிற்காகவும், இன ஒற்றுமைக்காகவும், சமாதானத்திற்கு ஆற்றிய பணிக்காக "தேஷமாண்ய" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார் என்பது சிறப்பம்சமாகும். இவர் இந்திய கலாநிதி ( Doctorate) பட்டமும் பெற்றுள்ளார். றோட்டரிக்கழகத்தினால் சர்வதேச விருதும் பெற்றார். இவருக்கு தேஷபந்து, தேஷமாணவ ஹிதரி, சாமமாண்ய, அகில இலங்கை சமாதான நீதவான் விருதும் வழங்கப்பட்டது.

உரோமை தூய அக்குவாயினஸ் பல்கலைக்-கழகத்தின் முதுமாணிப்பட்டப்படிப்பின் இறுதியாண்டு மாணவரான அருட்பணி. ஜோர்ஜ் திசாநாயக்க சென்ற ஆண்டு ஜெனிவாவில் நடைபெற்ற உலகத்-திருச்சபைக் கூட்டத்தில் வத்திக்கான் பிரதிநிதியாக பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவரது எதிர்காலம் செழிப்பாக அமைய இறைவனிடம் மன்றாடுவோம்.

அன்பின் வாசகர்களே!

எமது ஞான ஒளி பத்திரிகையின், உயிர்ப்பு ஞாயிறு சிறப்பிதழில், உங்கள் ஆக்கங்களான கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், சித்திரங்கள் போன்றவைகள் இடம்பெற வேண்டுமானால் எமக்கு எழுதி அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

எமது முகவரி : ஆசிரியர்
ஞான ஒளி,
இல, 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை
பொரல்லை, கொழும்பு - 08

ஞான ஒளி
GNANA OLI

கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல 0112695984,0114899611 பெக்ஸ் 0112692586,
மின்னஞ்சல் முகவரி cgnanaoli@yahoo.com
02, பங்குனி மாதம், 2014 ஞாயிற்றுக்கிழமை.

## "எமது உள்ளம் அழுக்காகி கறைப்படிந்துவிட்டால் அதனை கழுவிப்போக்கிவிட வழி தேடுகின்றோமா? அதற்கான வழியாகத்தான் இத்தவக்காலம் இறைவனுடன் ஒப்புரவாக எம்மை அழைத்து நிற்கிறது"

## "நீங்கள் தூயோராவதே கடவுளின் திருவுளம்" (1தெச. 4:3)

திருவழிபாட்டு ஆண்டுச் சக்கரம் நம்மை மீண்டுமாக இன்னுமொரு தவக்காலத்திற்கு எம்மைச் அழைத்துச் செல்லவிருக்கிறது. ஒவ்வொரு வருடமும்தான் தவக்காலம் வருகிறது. வருடந்தவறாமல் செப தபம் செய்கிறோம். திருயாத்திரை செல்கிறோம். தவக்காலம் முடிவடைந்ததும் மீண்டும் அதே பழைய வாழ்க்கை வாழ ஆரம்பித்து விடுவோம். அதே வாழ்க்கையில் எம்மால் நிலைத்து நிற்க முடியவில்லை. ஏனென்றால் மனிதன் பலவீனமானவன். அவன் தொடர்ந்து பலவீனத்தில் வீழ்ந்து கிடக்காமல் எழுந்து நடந்திடத்தான் இத்தவக்காலம் தரப்பட்டுள்ளது. எமது உடம்பில் அழுக்கு படிந்துவிட்டால் நன்றாக குளித்து உடலை பளிச்சென வைத்துக் கொள்கின்றோம். எமது உடையில் அழுக்கோ கறையோ படிந்துவிட்டால் அதனைப் போக்க தேவையானவற்றைப் பாவித்து அதனை போக்கிவிடுகின்றோம். ஆனால் எமது உள்ளம் அழுக்காகி கறைப்படிந்துவிட்டால் அதனை கழுவிப்போக்கிவிட வழி தேடுகின்றோமா? அதற்கான வழியாகத்தான் இத்தவக்காலம் இறைவனுடன் ஒப்புரவாக எம்மை அழைத்து நிற்கிறது. நாம் பாவம் செய்யவில்லை என்றால் நாம் பொய்யர்கள். நமது வாழ்க்கையில் எமது சிந்தனை, சொல், செயல், நமது பார்வை தூய்மையானதாக இருக்க வேண்டும். இவை எல்லாவற்றிலும் சிந்தனைதான் மிகத் தூய்மையானதாக இருக்கவேண்டும். ஏனென்றால் மனித சிந்தனையிலிருந்துதான் பாவம் பிறக்கிறது.

மனமாற்றம் என்பது தவறான எண்ணங்களை பிழையான செயல்களை மாற்றுவதாகும். ஆண்டவர் இயேசுவை அடைய எமக்குத் தடையாய் இருப்பது எம்மிடத்தில் பாவம் இல்லை என்ற அகங்காரம். தன்னிடம் பாவம் உண்டு என்று நினைப்பவன் மனம் மாறுவான். ஆனால் தன்னிடம் பாவம் எதுவுமே இல்லை என்று எண்ணுபவன் ஒருபோதும் மனம் மாறவேமாட்டான்.

நாம் எப்போதும் நல்லவற்றையே சிந்தித்து வாழும்போது எமக்கு யாரும் தீயது நினைத்தாலும் எமக்கு அது ஒரு பொருட்டாக இருக்காது. யாரும் எமக்கும் எது நினைத்தாலும் எது செய்தாலும் அதுபற்றி எந்தவித கவலையும் கொள்ளாதுவிட்டால் தீங்கு நினைப்பவரும் அமைதியாகிவிடுவார். இல்லாவிட்டால் நாமும் அவர் மீது கோபம் கொண்டு அவரை பழிவாங்கவும் அவர்மீது எரிச்சல்படவும் ஆரம்பித்து விடுவோம். மற்றவரில் குறைகாணும் எண்ணமே வளர்ந்து கொண்டே செல்லும். மற்றவர் நல்லது எதுவும் செய்தாலும் அது எமக்கு கெட்டதாகவே தெரியும். எமது மனம் அமைதி இழந்து வீண் கவலைக்குள் மூழ்கிவிடும். அத்தோடு இறைவனைவிட்டும் வெகுதூரம் சென்றுவிடுவோம்.

நமது சிந்தனையில் நல்லவற்றை பிறக்கச் செய்வோம். மற்றவரை நாம் நல்ல எண்ணங்கொண்டு நோக்கினால் அவரில் இருக்கும் கெட்ட எண்ணமும் அவரிடமிருந்து அகன்றுவிடும். நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தைகளும் மற்றவருக்கு எரிச்சலூட்டாமல் அன்பை மட்டும் விதைப்பதாக இருக்கட்டும். நமது செயல்கள் அனைத்தும் தூய்மை பெறட்டும். அப்போது எம் வாழ்வில் எதிரிகள் இருக்கமாட்டார்கள். கோபதாபங்களுக்கு இடமிருக்காது. மனம் அமைதி பெற்று வாழ்வும் ஒளிமயமாகமாறும்.

ஆக இத்தவக்காலம் மனமாற்றத்தை கொண்டுவரும் காலமாகட்டும். வெறும் ஒறுத்தல் முயற்சிகளும் வழிபாடுகளும் பக்திமுயற்சிகளும் திருயாத்திரைகளும் நம்மை இறைவன்பால் ஈர்த்துச் செல்லாது. மாறாக உண்மையாக எமது உள்ளம் நொறுக்கப்பட்டு ஆண்டவரிடம் மண்டியிட்டு தஞ்சமடையவேண்டும். அப்போதுதான் தவக்காலம் அர்த்தமுள்ளதாக்கப்படும். இவ்வுலகில் எந்தவொரு மகனோ மகளோ வேதனைப்படும்போது அவர்களாடு சேர்ந்து வேதனைப்படுபவர்தாம் நம் அன்புத் தந்தை. ஒருவர் வேதனைப்படும்போது நமக்கு வேதனை ஏற்படுகிறது என்றால் நம்மைப் படைத்த கடவுளுக்கு வேதனை ஏற்படாமல் போகுமா? "செவியைப் பொருத்தியவர் கேளாதிருப்பாரோ? கண்ணை உருவாக்கியவர் காணாதிருப்பாரோ?" (தி.பா.94:9) ஆகவே அனைவரின் மன்றாட்டைக் கேட்பவரும், துன்பங்களை காண்பவரும் நமக்கு இரங்காதிருப்பாரோ? நிச்சயம் இரங்குவார். புதுவாழ்வு தருவார் என்ற நம்பிக்கையோடு தவக்காலத்தை ஆரம்பிப்போம்.

இறையாசீருடன்
ஆசிரியர்

**திருவழிபாடு ஒவ்வொரு காலத்தின் சிறப்பால் அலங்கரிப்படுகின்றது. திருவழிபாட்டு காலத்தில் தவக்காலம் என்பது மிகவும் சிறப்பான காலம்.**

காரணம் : இக்காலம் தவ வாழ்க்கையோடும், கிறிஸ்தவ புதுவாழ்வுக்கான திருமுழுக்குத் தயாரிப்போடும் தொடக்க கால திருச்சபையில் பின்னிப் பிணைந்திருந்ததே முதல் காரணம்.

மற்றொன்று இத்தவக்காலத்தில் பாவிகள் மனம் திரும்பி மீண்டும் கிறிஸ்தவ வாழ்வைப் புதுப்பிக்கும் புனித காலம் என்று சொல்லலாம்.

## தவக்காலம் - அது என்ன?

தவக்காலத்தைக் குறித்துக் காட்ட ஆங்கில மொழியில் 'Lent" என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. இதற்கு "வசந்த காலம்" என்பது பொருள். இச் சொல் பாஸ்காவுக்கு முந்திய ஆறு வாரங்களின் ஆன்மீக ஒடுக்கம், மற்றும் பயிற்சி சார்ந்த பொருளை துளியளவும் எடுத்துக் கூறவில்லை.

தவக்காலம் எப்படித் தோன்றியது என்ற தெளிவான திட்டவட்டமான வரலாற்றைக் கூற முடியாது. ஆனால் தொடக்க திருச்சபையில் திருமுழுக்குப் பாஸ்கா ஞாயிறுக்கு முன்பு 40 நாட்கள் தயாரிப்பது வழக்கம். இது பல வேளைகளில் கூடிய தயாரிப்பாக அமைந்ததுண்டு. இது காலப்போக்கில் பாஸ்காவைச் சிறப்பாக கொண்டாடப்படுவதற்கான பக்தியுள்ள தயாரிப்புக் காலமாக கருதப்பட்டு வழக்கத்திற்கு வந்தது. எனினும் உரோமைப் பேரரசன் கான்ஸ்டன்டைன் கி.பி 313இல் இதனைச் சட்டப்பூர்வமாக திருச்சபையின் வழிபாட்டில் அறிமுகப்படுத்தியதாக கூறப்படுகின்றது.

இதற்கு விவிலிய ஆதாரங்களும் பல இருக்கின்றன. தொடக்க நூல் 7:12 இல் நோவாவின் காலத்தில் 40 நாட்கள் இரவும் பகலும் பூமியின் மேல் மழை பொழிந்ததாகவும், தொ.நூ 50:3 இல் யாக்கோபுவுக்கு 40 நாட்கள் துக்கம் கொண்டாடியதாகவும் அவருடைய உடலை மருத்துவ முறைப்படி பாதுகாக்க 40 நாட்கள் தேவைப்பட்டது என்ற குறிப்பும் சொல்லப்படுகின்றது.

எலியா 40 பகலும், நாற்பது இரவும் நடந்து ஒரேபு என்னும் கடவுளின் மலையை அடைந்தார் (1 அர 19:5) என்ற குறிப்பும், இந்த ஒரேபு மலையில் மோசே 40 நாட்கள் இரவும் பகலும் அப்பம் உண்ணாமலும், தண்ணீர் குடிக்காமலும் நோன்பிருந்து கடவுளிடமிருந்து பத்துக் கட்டளையைப் பெற்றுக்கொண்டார் என்றும் குறிப்பிடப்படுகின்றது (வி.ப 34:28).

கானான் நாட்டை உளவு பார்க்கச் சென்றவர்களும், நாற்பது நாட்கள் நாட்டை உளவு பார்த்த பின் மோசேயிடம் திரும்பி வந்தனர். (எண் 13:25) யோனா இறைவாக்கினரும், மனமாற்றத்தின் செய்தியை நினிவே நகரில் அறிவிக்கும்போது "இன்னும் நாற்பது நாட்களில் நினிவே அழிக்கப்படும்" என்று முழங்கினார் (யோனா 3:4).

இதைத் தவிர இயேசு தம் பணியைத் தொடங்கும் முன்பு நாற்பது நாட்கள் நோன்பிருந்து செபித்தார். அதன்பின் அவரை அலகை சோதனைக்குட்படுத்தியது (மத் 4:2). இவ்வாறு "நாற்பது" என்ற எண் விவிலியத்தின்படி புனித எண்ணாகக் கருதப்பட்டது. பிறகு திருச்சபையில் ஆன்மீகத் தயாரிப்புக்கான தவக்காலமாக அனுசரிக்கப்பட்டு வருகின்றது.

திருச்சபையின் வழிபாட்டுக் கால அட்டவணையில் திருநீற்றுப் புதனிலிருந்து உயிர்த்தெழும் நாள்வரை 46 நாள்களாக வரும் இதில் 6 ஞாயிறு நீங்களாக 40 நாள்கள் தவக்காலமாக குறிக்கப்படுகின்றது.

தவக்காலத்தில் செபம், நோன்பு, தர்மம் என்ற நற்செயல்களுக்குச் சிறப்பிடம் கொடுக்கப்படுகின்றது. இவை அனைத்தும் ஆன்மீக வாழ்வில் முன்னேறுவதற்காக கொடுக்கப்பட்டவை. கடவுளோடும், மனிதரோடும் கொண்டிருந்த உறவில் ஏற்பட்ட முறிவைச் சரிசெய்து உறவைப் புதுப்பிக்கும் உறவின் காலம் தவக்காலம். ஆன்மீக வாழ்வில் மறுமலர்ச்சிக் காண வேண்டும் என்பதற்காக தரப்பட்டுள்ள ஆன்மீகக் காலம் இந்த தவக்காலம்.


எனவே கடவுளோடு கொள்ளும் உறவில் உறுதி பெறவும், நிலைத்-திருக்கவும் இக்காலத்தைப் பயன்-படுத்துவோம். இதன் விளைவாக நம்மையே சரி செய்து கொண்டு உறவில், பிறரோடு கொண்டுள்ள நல் உறவில் வளர இறைவாக்கைப் பயன்படுத்துவோம். சிலுவைப் பாதையிலும் நோன்பிலும் பங்கேற்றுப் பயன்பெறுவோம்.

**திருச்சபையின் வழிபாட்டுக் கால அட்டவணையில் திருநீற்றுப் புதனிலிருந்து உயிர்த்தெழும் நாள்வரை 46 நாள்களாக வரும் இதில் 6 ஞாயிறு நீங்களாக 40 நாட்கள் தவக்காலமாக குறிக்கப்படுகின்றது.**




## உண்மை உறைக்கும்

கமிலஸ்





# திருநீற்றுப் புதன்



**இயேசு "சிலுவை" வழியாக பாவத்திலிருந்து நம்மை மீட்டார். அதேபோல் இந்த "சாம்பல் சிலுவை" நம்மை பாவத்தில் இருந்து மீட்கிறது என்பதைத் தான் உணர்த்துகின்றது"**

எந்த ஒரு செயலுக்கும் தொடக்கம் என்பது மிகவும் முக்கியமானது. நாம் ஒரு செயலைச் செய்ய தொடங்கி விட்டோம் என்றால் பல முயற்சிகள் செய்து அச் செயலை செய்து முடித்துவிட முழு மூச்சாய் ஈடுபடுவோம். இல்லை என்றால் அதன் முழுமையை அடைய முடியாது.

தவக்காலத்தின் தொடக்கமும், முத்தாய்ப்புமாக விளங்குவது திருநீற்றுப் புதனாகும். இன்றிலிருந்தே நாம் எம்மை தயார் படுத்தி முழுமை பெற வேண்டும்.

திருநீற்றப் புதன் என்று அழைக்கப்படும் சாம்பல் நாள் 6ஆம் நூற்றாண்டிலேயே கொண்டாடப்பட்டது. ஆனால் கிரகோரியனின் காலத்தில் தான் நெற்றியில் சாம்பல் பூசும் வழக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இது ஆங்கிலோ - சாக்ஸன் திருச்சபையில் 10ஆம் நூற்றாண்டில் பழக்கத்திற்கு வந்தது. 1091இல் பொனவெந்தோ பேரவையில் மேற்குத் திருச்சபையில் பரவலாக்கப்பட்டது. குரு ஆல் பெரிக் (1955 - 1020) எழுதிய "புனிதர்களின் வாழ்வு" என்ற புத்தகத்தில் திருநீற்றுப் புதனைப்பற்றி குறிப்பிடுகின்றார்.

தவக்காலத்தின் முதல் நாளாக திருநீற்றுப் புதன் தான் இருக்கும். ஆனால் திகதி ஒவ்வொரு வருடமும் மாறியே வரும். காரணம் இதனுடைய திகதி ஈஸ்டர் பெருவிழாவை முன்னிட்டே அமைகிறது. இது பெரும்பாலும் மாசி 4ஆம் திகதி அல்லது பங்குனி 10ஆம் திகதியையோ ஒட்டிதான் வரும்.

## சாம்பல் எதற்காக



பாலை நிலத்தில் சாத்தானை வெல்வதற்கு மனிதரான இயேசுவுக்குக் கடவுளின் ஆற்றல் அதிகமாகத் தேவைப்பட்டது. இயேசுவே தம் தந்தையை ஒவ்வொரு நொடிப் பொழுதும் சார்ந்திருந்தார். நாம் பலவீனர்கள், மனிதர்கள் என்ற வகையில் நாம் சாவுக்கு உரியவர்கள், துன்பத்தையும், பாவத்தையும் வென்றெடுப்பதற்கு நாம் கடவுளைச் சார்ந்தே வாழ வேண்டும். அவரைத் தவிர்த்து நாம் எதையும் செய்யவும் முடியாது வாழவும் முடியாது. அவரை விட்டு விலகினோம் என்றால் நாம் வெறும் பூச்சியமே என்பதைக் குறிக்கும் முகமாகத்தான் சாம்பல் பயன்படுத்தப்படுகிறது.

குருவானவர் மக்களது நெற்றியில் சாம்பலைப் பூசும்போது "மனிதனே நீ மண்ணாக இருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய்" என்று சொல்வார். இது ஆதாம், ஏவாளுக்கு கடவுள் சொன்ன வார்த்தைகள் அதாவது ஆதி பெற்றோருக்கு கடவுள் சொன்ன வார்த்தைகள், ஆதி பெற்றோர் செய்த பாவத்தால் கடவுளோடு கொண்ட உறவை முறித்துக் கொண்டதால் அதனுடைய விளைவாக சாவை சம்பாதித்துக் கொண்டனர். நாமும் பாவத்தில் வீழ்ந்தோம் என்றால் வீழ்ச்சியும், சாவும் உறுதி என்பதைத் தான் இந்த சாம்பல் எமக்கு உணர்த்துகிறது.

சாம்பலைப்பற்றி திருவிவிலியத்தில் எத்தனையோ இடங்களில் குறிப்பிடப்படுகின்றன. "என்னையே நொந்துக் கொள்கிறேன், புழுதியிலும், சாம்பலிலும் இருந்து மனம் வருந்துகிறேன்" (யோபு 42 : 6)

"நினிவே அழிக்கப்படப்போகும் செய்தி அரசனுக்கு எட்டியது. அவன் தன் அரியணையை விட்டிறங்கி அரச உடையை களைந்து விட்டு சாக்கு உடை உடுத்திக் கொண்டு சாம்பல் மீது உட்கார்ந்தான்" (யோனா 3:5) படைத்தலைவன் ஆமான் யூதர்கள் அனைவரையும் வேரறுக்க அரசன் அகஸ்வேர் வழியாக சதித்திட்டம் தீட்டியிருக்கிறான் என்பதை அறிந்த "மொர்த்தக்காய் தம் ஆடையைக் கிழித்துக் கொண்டு சாக்கு உடை அணிந்து, சாம்பல் பூசிக்கொண்டு வெளியே நகரின் மையத்திற்கு சென்று ஓலமிட்டு மனங்கசிந்து அழுந்தான்" (எஸ் 4:1-3) "நான் நோன்பிருந்து, சாக்கு உடை அணிந்து சாம்பலில் அமர்ந்து என் தலைவராகிய கடவுளிடம் திரும்பி மன்றாடி வேண்டிக் கொண்டேன்" (தானி 9:3)

இவ்வாறு சாம்பலில் அமர்வது என்பது தனது மனமாற்றத்தைக் கடவுளிடம் காட்டி அவரது இரக்கத்தைப் பெறுவதற்கும், தன்னையும் தன்னைச் சார்ந்த மக்களையும் கடவுள் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவும்தான் கடவுளே, நான் உம் முன்னிலையில் தூசி என்ற தாழ்ச்சியை வெளிப்படுத்துவதற்காக சாம்பலில் அமர்ந்தனர். கடவுளின் மன்னிப்பையும் இரக்கத்தையும் பெற்றுக்-கொண்டனர்.

## ஏன் சிலுவை அடையாளம்



இயேசு சிலுவை வழியாக பாவத்திலிருந்து நம்மை மீட்டார். அதேபோல் இந்த சாம்பல் சிலுவை நம்மை பாவத்தில் இருந்து மீட்கிறது என்பதைத் தான் உணர்த்துகின்றது. திருமுழுக்குப் பெறும் குழந்தை, குருவால் சிலுவை அடையாளம், இடப்பட்டு, பாவத்தின் தீமையின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு கிறிஸ்துவுக்கும் நேர்மை-க்கும் அடிமையாகிறது (உரோ 6:3-15) என்பதைத் தான் உணர்த்துகிறது. திருநீற்றப் புதனன்று சாம்பலில் இடப்படும் சிலுவை அடையாளமும் இதைத்தான் நமக்கு உணர்த்துகின்றது.

## எப்படி தயாரிக்கப்படுகின்றது

வெற்றியின் ஓலையாக கடந்த ஆண்டு குருத்து ஞாயிறன்று பயன்படுத்தப்பட்ட குருத்தோலை, எரிக்கப்பட்டு, சாம்பலாக்கி, கிறிஸ்மா தைலம் சேர்க்கப்பட்டு புனிதத் தன்மையை அடைகிறது. குருவானவர் இந்த சாம்பலுக்கு தூபம் காட்டுவார். இவ்வாறு வெற்றியின் அடையாளமாக இருந்தது பரிகாரம், மனமாற்றம் ஆகிய வற்றின் அடையாளமாக மாறுகிறது.

ஆகவே இவ்வருடமும் திருநீற்றுப் புதன் நமது மனமாற்றத்திற்கும், தாழ்ச்சிக்கும் வெறுமைக்கும் அழைப்பு விடுக்கின்றது.. இதை உணர்ந்தவர்களாக இத்தவக்காலத்தினை அர்த்தமுள்ள வகையில் பயன்படுத்த முனைவோம்.

இறைவனின் மன்னிப்பையும் இரக்கத்தையும் பெறுவோம்.

★★★★★
★★★★★★★★

# மரியன்னையின் மாண்பும் மகத்துவமும்...

*ஆக்கம் : அருட்சகோ. செ தொபியாஸ்* cmsf, *பிரான்சிஸ் சகோதரர், மாத்தளை*

**"இனிய உன் நாமம் ஓதிடத் தினமும் அனைவரும் மகிழ்வோமே..."** மரியின் மாண்பு என்ற மரியாளைப் பற்றிய அரிய நூலில் புனித அல்போன்ஸ் லிகோரியார் மரியின் நாமத்தினால் நடந்தேறிய அடியிற் கண்ட அருஞ்செயலை விபரிக்கிறார். துறவி ஒருவர் தனது இல்லத்தில் கூண்டுக்குள் அடைத்து அருமை பெருமையாகக் கிளி ஒன்று வளர்த்து வந்தார். வந்தவர்களை வரவேற்பதற்காக இந்தக் கிளியை "மரியே வாழ்க" என்று கூறுவதற்குப் பழக்கி வைத்திருந்தார். இவ்வாறு வாழ்த்துவதைக் கேட்டவர்கள் யாவரும் பரவசம் அடைந்தனர். ஒரு நாள் சற்றே வெளியில் திரியட்டும் என்று சொல்லி கிளியை கூண்டுக்குள் இருந்து திறந்து விட்டார். வெளியே திரிந்த அந்தக் கிளியை ஒரு பருந்து அடித்துக் கொண்டுபோக வட்டமிட்டுத் திடீரென கீழே பறந்து வந்து கிளையை அடிக்க நெருங்கியது. ஆபத்தை உணர்ந்த கிளி "மரியே வாழ்க" என்று சத்தமிட்டது. என்னே ஆச்சரியம்! என்னே புதுமை! பருந்து அந்த இடத்திலேயே விழுந்து மடிந்தது. இது உண்மை. கட்டுக்கதையல்ல என்பதையும், புனித அல்போனஸ் லிகோரியாரே குறிப்பிட்டதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

மரியன்னையின் மைந்தர் என அழைத்து கொள்ளும் புனித ஜெர்மானுஸ் எழுப்பிய மன்றாட்டும் "எனது வாழ்வின் இறுதி வார்த்தையாக மரியின் பெயரை உச்சரிக்கும் வரம் வேண்டும்" புனித பிரிஜட் அம்மாளுக்கு மரியன்னை கொடுத்த காட்சியில் அலகையின் கூட்டம் மரியின் பெயரையாகிலும் உச்சரிக்கக் கேட்ட உடன் மிரண்டு ஓடுகின்றன என்றும் வானதூதர்கள் விரைந்து ஓடிவந்து உதவுகின்றனர் என்றும் கூறியுள்ளது நமக்கு ஆறுதல் அளித்திடல் வேண்டும். புனித அம்புரோஸ் "மரியின் நாமம் அந்த இனிய நாமம் எனது உள்ளத்தின் ஆழத்தில் மீட்பின் தைலமாக இறங்குவதாக" என்று மன்றாடுவாராம். புனித மாண்ட்போர்ட் அடிக்கடி சொல்லி வந்தது "பெரிய பெரிய புனிதர்கள் உருவாக்கப்படும் பணி. உலகில் இறுதிவரை மரியன்னைக்கு உரித்தானது" மரியா இறைவனின் தாய் அவர் மனுக்குலத்தின் மாணிக்கமாகத் தோன்றினார் என்ற இருபெரும் கருத்துக்களைத் தருகின்றது. புனித அகுஸ்தினார் மரியாவை ஏவையுடன் ஒப்பிட்டுப் பின்வருமாறு எழுதியுள்ளார். "நாம் அவைரும் ஆவலுடன் எதிர்பார்த்த பெருவிழா வந்துவிட்டது. மண்ணில் தோன்றிய விண்மலர் இவர். இவரிடமிருந்து தான் வான்புகழ் லீலிமலர் தோன்றியது. இவருடைய வருகையால் தான் முதற் பெற்றோரிடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட தூசி படிந்த மனித இயல்பு மாற்றம் அடைந்து மேன்மை பெற்றது. இதனால் இந்த மனித இயல்பிற்கு ஏற்பட்ட இழுக்கு நீங்கியது" எமது அன்றாட வாழ்வில் பல்வேறு அடையாள மொழிகளை பயன்படுத்துகின்றோம். சிரிப்பு மகிழ்ச்சியின் அடையாளம், அழுகை வருத்தத்தின் அடையாளம். முத்தம் அன்பின் அடையாளம், அவ்வாறே இயேசு செய்த புதுமைகள் என்ற அடையாளங்களின் அடியிலே இயேசுவின் மாட்சிமையைக் காண்கிறோம். புதுமை இயேசுவின் இறைமாட்சிமையை வெளிப்படுத்தி இயேசுவின் மேல் விசுவாசத்தை அதிகரிக்க துணை செய்கின்றது. இந்நிலையில் மரியன்னை மணமக்களுக்கு ஏற்பட்ட அவலநிலையை நீக்கி அவர்களை மகிழ்விக்க வேண்டுமென்ற மனிதாபிமான முறையில் இறைமகன் இயேசுவை இப்புதுமையின் வழி இறைமாட்சிமையை வெளிப்படுத்தி அவர் சீடர்களைத் தன்மேல் அல்ல தனது மகனில் விசுவாசம் கொள்ளத் தூண்டுகிறாள். இதன் மூலம் எமது வாழ்வில் எந்நிலையிலும் தொல்லைகள் நீக்கி, நல்லவை நடக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். உண்மையான விசுவாசத்திலிருந்து, இறை வெளிப்பாட்டி-லிருந்து மரியாள் பக்தி வளர வேண்டும்.

மரியாயின் பக்தி இறைபணி சார்புள்ளதாக இருக்க வேண்டும். அத்தோடு ஒன்றிப்பு சார்ந்தாகவும் இருக்க வேண்டும். மேலும் மரியாளின் பக்தி மனிதவியல் சார்ந்ததாகவும் இருக்க வேண்டும் இறைவனுக்கும் மனுக்குலத்திற்கும் தாயான மரியன்னையின் நாமம் அன்றும், இன்றும் என்றும் வாழ்த்தப்படுக. அன்று இறைவனின் ஆணையால் தூது சொல்ல வந்த வானதூதர் "அருள் நிறைந்தவளே..." (லூக் 1:28) என்று வாழ்த்தினார். புனித லூக்காஸ் நற்செய்தியில் "இந்நாள் முதல் எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே" என மரியாள் முன்மொழிவதற்கேற்ப அவள் நாமத்தை தினமும் ஓதி அனைவரும் மகிழ்ந்திடுவோம்.

மரியே வாழ்க! வாழ்க மரியே!
ஆவே மரியே! Ave Maria

## உன்னதமானவை

**இருக்க வேண்டியது மூன்று**
தூய்மை
நீதி
நேர்மை

**அடைய வேண்டியவை மூன்று**
ஆன்ம சுத்தம்
முயற்சி
உள்ள மகிழ்வு

**கொடுக்க வேண்டியது மூன்று**
இல்லாதோர்க்கு ஈதல்
துன்புறுவோருக்கு ஆறுதல்
தகுதியானவர்களுக்கு பாராட்டு

**பெற வேண்டியவை மூன்று**
அன்பு
நம்பிக்கை
மென்மை

**ஆள வேண்டியவை மூன்று**
கோபம்
நாக்கு
நடத்தை

**தவிர்க்க வேண்டியவை மூன்று**
தீமை செய்தல்
பழி வாங்குதல்
நன்றியின்மை



# தவக்கால நாட்காட்டி

### 05.03.2014 – விபூதிப் புதன் தவக்காலத்தின் 1ம் நாள்

**வாசகங்கள்**

யோவேல் 2:12-18 திபா 51:1-4.10-13.15
1கொரி 5:20-6-2 மத் 6:1-6.16-18

**சிந்தனை :**

தவக்காலம், மனம் திரும்பி நற்செய்தியை நம்ப எமக்கு உதவுகிறது. ஒரு சந்தி, மாமிச தவிர்ப்பு, செபம், தவமுயற்சிகள் அனைத்துமே மனந்திரும்பி இறைவனை நாட வேண்டுமென்ற எமது விருப்பத்தின் வெளிப்பாடுகளே. நற்செய்தியை நம்புகிறவன் தனது நற்செயல்களினூடாக அதனை வெளிக்காட்டுகிறான்.

**செயல் :**

ஒரு சந்தியும், மாமிச தவிர்ப்பும் கடைப்பிடித்து அந்த பணத்தை பிறருக்கு பயனுள்ள விதத்தில் செலவிடவும்.

**செபம் :**

"கடவுளே! தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும். உம் மீட்பின் மகிழ்ச்சியை மீண்டும் எனக்கு அளித்தருளும்".

### 06.03.2014 – தவக்காலத்தின் 2ம் நாள்

**வாசகங்கள்**

இச 30:15-20 திபா 1:1-4.6 லூக் 9: 22-25

**சிந்தனை :**

அனைவருமே மகிழ்ச்சியான வாழ்வை வாழ துடிக்கின்றனர். ஆனால் எப்படி மகிழ்ச்சியான வாழ்வை வாழ்வதென்று பலருக்கு தெரியாது. தன் சுமைகளை இறைவனிடம் ஒப்படைத்து, அவர் மீது நம்பிக்கை கொள்பவனே பேறுபெற்றவன் (திபா 40:4)

**செயல் :** துன்பத்தில் வாடுகின்ற ஒருவருக்கு இன்பத்தை பெற்றுக் கொடுக்கும் ஒரு செயலைச் செய்க.

**செபம் :** உனது துன்ப வேதனைகளை இறைவனிடம் ஒப்புக்கொடு.

### 07.03.2014 – தவக்காலத்தின் 3ம் நாள்

**வாசகங்கள்**

எசா 58:1-9 திபா 51:1-4.16-17 மத் 9:14-5

**சிந்தனை :**

எனது தவமுயற்சிகளும், பக்தி முயற்சிகளும் எனது அன்றாட வாழ்விற்கு ஏற்றதாக அமைய வேண்டும். பகிர்வு, தாழ்ச்சி அற்ற வாழ்வு "கிறிஸ்தவ வாழ்வு" ஆக முடியாது.

**செயல் :** உம்மிடம் இருப்பதை இன்னுமொருவரோடு பகிர்ந்து கொள்ளவும்.

**செபம் :** சிலுவைப் பாதை செய்யவும்.

### 08.03.2014 – தவக்காலத்தின் 4ம் நாள்

**வாசகங்கள்**

எசா 58:9-14 திபா 86:1-6 லூக் 5:27-32

**சிந்தனை :**

இயேசு இவ்வுலகிற்கு வந்தது பாவிகளாகிய எம்மை மீட்பதற்காகவே. எமது வழிகளை விட்டு விலகி இறைவனின் விருப்பப்படி பிறரை மதித்து, பகிர்ந்து வாழ்வதால் வாழ்விலே வெற்றியும், மகிழ்ச்சியும், மன நிறைவும் நிச்சயம் கிடைக்கும்.

**செயல் :** உனது எதிரிகளில் ஒருவருக்கு மன்னிப்பை வழங்கு

**செபம் :** "ஆண்டவரே! உமது உண்மைக்கேற்ப நான் நடக்குமாறு உமது வழியை எனக்குக் கற்பியும்".

### 09.03.2014 – தவக்காலத்தின் முதலாம் ஞாயிறு தவக்காலத்தின் 5ம் நாள்

**வாசகங்கள்**

தொ.நூ 9:8-15 திபா 25:4-9
1பேது 3:18-22 மாற் 1:12-15

**சிந்தனை :**

எமது திருமுழுக்கின் ஊடாக எம் ஒவ்வொருவருடனும் ஓர் உடன்படிக்கையை செய்து கொண்டார். தவக்காலம் இவ் உடன்படிக்கையை புதுப்பிக்கும் காலம். இறைவன் தம் உடன்படிக்கைக்கு விசுவாசமுள்ளவராக இருக்கின்றார். நான் அவருக்கு ஏற்ற வகையில் செயல்படுகிறேனா?

**செயல் :** ஞாயிறு திருப்பலியில் பங்குகொள்.

**செபம் :** "ஆண்டவரே! உம் பாதைகளை நான் அறியச் செய்தருளும், உம் வழிகளை எனக்குக் கற்பித்தருளும்".

### 10.03.2014 – தவக்காலத்தின் 6ம் நாள்

**வாசகங்கள்**

லேவி 19:1-2,11-18 திபா 19: 7-9,14 மத் 25:31-46

**சிந்தனை :**

கடவுள் தூயவராக இருப்பதுபோல, அவரது பிள்ளைகளாகிய நாமும் தூயவர்களாக இருக்க வேண்டும். இன்றைய வாசகங்கள் மனித உரிமைகளை மதிப்பதன் மூலமே ஒருவன் கடவுளைப் போல தூயவனாக மாற முடியும் என்பதை எடுத்துரைக்கின்றன. இதுவே சமாதானத்தின், நீதியின் வழியாகவும் அமையும்.

**செயல் :** பிறரின் அடிப்படை மனித உரிமைகளை பாதுகாப்பேன் என்ற முடிவை எடு.

**செபம் :** "என் கற்பாறையும் மீட்பருமான ஆண்டவரே! என் வாயின் சொற்கள் உமக்கு ஏற்றவையாக இருக்கட்டும்".

### 11.03.2014 – தவக்காலத்தின் 7ம் நாள்

**வாசகங்கள்**

எசா 55:10-11 திபா 34:3-6.15-18 மத் 6:7-15

**சிந்தனை :**

ஆண்டவருடைய வார்த்தை வல்லமை உள்ளது என்பதை அவரது செயல்களினால் அறிந்து கொள்கின்றோம். எமது சொல்லும், செபமும் வல்லமையுள்ளதாக அமைய வேண்டுமென்றால் அதனை எமது செயல்களினூடாக வெளிப்படுத்த வேண்டும்.

**செயல் :** "பரலோக" மந்திரத்திலே சொல்லப்படுகின்ற செயல்களை இன்று செய்வதற்கு முயற்சி செய்.

**செபம் :** "வாழ்விலே நம்பிக்கை இழந்து தவிக்கும் ஒருவருக்காக செபி".

### 12.03.2014 – தவக்காலத்தின் 8ம் நாள்

**வாசகங்கள்**

யோனா 3:1-10 திபா 51:1-2.10-11.16-17
லூக் 11:29-32

**சிந்தனை :**

தனது தீய வழிகளை மாற்றிக் கொள்ள முன்வரும் ஒருவன் தன்னை மட்டுமன்றி, அனைவரையுமே அழிவிலிருந்து காத்துக் கொள்கிறான். மனந்திரும்புதலே இறைவனையும், அனைவரையும் மகிழ்விக்கக் கூடிய ஒரே வழி.

**செயல் :**

பிறரோடு உறவாட தடையாக இருக்கும் உமது தீயக் குணங்களில் ஒன்றிலிருந்து விடுபட முயற்சி செய்.

**செபம் :** "கடவுளே! நொறுங்கிய, குற்றமுணர்ந்த உள்ளத்தை நீர் அவமதிப்பதில்லை".

### 13.03.2014 – தவக்காலத்தின் 9ம் நாள்

**வாசகங்கள்**

எஸ்ரா 4:17 திபா 138:1-3.7-8 மத் 7:7-12

**சிந்தனை :**

விசுவாசமுள்ள செபத்தை கடவுள் நிச்சயம் கேட்பார். எமக்கு எது எப்போது தேவை என்பதை எமது வானகத் தந்தை நன்கு அறிந்திருக்கிறார். நாம் தொடர்ந்து, விடாமுயற்சியுடன் செபிக்க வேண்டும். பிறர் நமக்கு எதை செய்ய வேண்டுமென விரும்புகிறோமோ, அதையே நாமும் அவர்களுக்கு செய்ய வேண்டும்.

**செயல் :** பிறர் உனக்கு செய்ய வேண்டுமென விரும்புவதை நீ அவர்களுக்குச் செய்

**செபம் :** உமது தேவைக்காக விசுவாசத்தோடு உருக்கமாகச் செபி

### 14.03.2014 – தவக்காலத்தின் 10ம் நாள்

**வாசகங்கள்**

எசே 18:21-28 திபா 130:1-8 மத் 5:20-26

**சிந்தனை :**

தன் பாவ வழியை விட்டு இறை மன்னிப்பை நாடுபவனை கடவுள் ஏற்று வாழ வைக்கிறார். அவ்வாறே, மன்னிப்பை முழுமையாக பெற்று அனுபவிக்க வேண்டுமென்றால், தன் சகோதரனோடு ஒப்புரவாக வேண்டும்.

**செயல் :** உன் அயலானோடு இணைந்து திருச்சிலுவைப்பாதையை செய்.

**செபம் :** "ஆண்டவரே! நீர் எம் குற்றங்களை மனதில் கொண்டிருந்தால், யார் தான் நிலைத்து நிற்க முடியும்? நீரே மன்னிப்பு அளிப்பவர்".

### 15.03.2014 – தவக்காலத்தின் 11ம் நாள்

**வாசகங்கள்**

இச 26:16-19 திபா 119:1-2.4-5.7-8 மத் 5:43-48

**சிந்தனை :**

இறைவன் எமக்கு தந்திருக்கும் கட்டளைகள் நாம் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் என்பதற்காகவே. எமது நலன் கருதியே இவை எமக்கு தரப்பட்டிருப்பதால், அதுவே மனித சமுதாயத்தின் ஈடேற்றத்திற்கு சாதகமாக அமைகிறது.

**செயல் :** உமது எதிரிக்காக செபிக்கவும்

**செபம் :** "ஆண்டவரே! உம் விதிமுறைகளை நான் கடைப்பிடிப்பேன், என்னை ஒருபோதும் கைவிட்டு விடாதேயும்".

### 16.03.2014 –தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு தவக்காலத்தின் 12ம் நாள்

**வாசகங்கள்**

தொ.நூ 22:1-2.9-13.15-18 திபா 116:10.15-19
உரோ 8:31-34 மாற் 9:2-10

**சிந்தனை :**

பாடுகள் மரணத்தின் ஊடாகவே இயேசு எமக்கு மீட்பைப் பெற்றுத் தந்து, தம் அரசை நிறுவுவார் என்ற உண்மையை தமது அப்போஸ்தலர்களால் மட்டுமல்ல, எம்மாலும் புரிந்துக் கொள்ள முடிவதில்லை. பாடுகள், வேதனைகளின் போதும் கூட இறைவனில் நம்பிக்கை வைப்பவனே வெற்றியடைகிறான்.

**செயல் :**

திருப்பலியில் பங்குகொண்டு, உன் துன்ப வேளையில் இறைவன் உனக்கு எவ்வாறு துணை நின்றார் என்பதை ஒருவரோடு பகிர்ந்து கொள்

**செபம் :** "திருப்பாடல் 116ஐ வாசித்து தியானி".

### 17.03.2014 – தவக்காலத்தின் 13ம் நாள்

**வாசகங்கள்**

தானி 9:4-10 திபா 79:8,9,11,13 லூக் 6:36-38

**சிந்தனை :**

எமது குற்றங் குறைகளை மறைப்பதற்காக நாம் பிறரை குற்றவாளிகளாக மாற்றுகின்றோம். நாம் செய்த பாவத்திற்கு நாம் பொறுப்பேற்காமல், மற்றவர்களை மாட்டிவிட முயற்சிக்கின்றோம். தீர்ப்பிடாதே, தீர்ப்பிடப்படமாட்டாய். இரக்கம் உள்ளவனாய் இரு.

**செயல் :** உனது தவறினால் துன்புறும் ஒருவருக்கு, உன்னால் ஆனதை செய்.

**செபம் :** "எங்கள் மீட்பராகிய கடவுளே! உமது பெயரை முன்னிட்டு எங்களை விடுவித்தருளும். எங்கள் பாவங்களை மன்னித்தருளும்".

### 18.03.2014 – தவக்காலத்தின் 14ம் நாள்

**வாசகங்கள்**

எசா 1:10.16-20 திபா 50:8-9.16-17.21.23
மத் 23:1-12

**சிந்தனை :**

எம் ஒவ்வொருவருக்கும் பல சமய, சமூக கடமைகள் உண்டு. ஆனால் அவற்றை நான் எதற்காக செய்கின்றேன்? அவற்றை அனைவரும் பார்க்க வேண்டும் என்ற வீண் பெருமைக்காக செய்கிறேனா அல்லது அனைவரின் நலனுக்காக செய்கிறேனா?

**செயல் :** உனது குடும்பத்தினரோடு நேரத்தை செலவு செய்.

**செபம் :** உனது குடும்பத்தினருக்காகச் செபி.

### 19.03.2014 – தவக்காலத்தின் 15ம் நாள்

**வாசகங்கள்**

எரே 18:18-20 திபா 31:4-5,13-15 மத் 20:17-28

**சிந்தனை :**

துன்ப, துயர வேதனைகள் மனித வாழ்வின் ஒரு பகுதி. அவற்றை கண்டு அஞ்சி ஒதுங்காமல், தைரியமாக முகங் கொடுப்பதிலேயே வாழ்வின் வெற்றியும், மகிழ்ச்சியும் தங்கியுள்ளது. இயேசு அவற்றிக்கு முகங் கொடுத்து எமக்கு மீட்பைப் பெற்றுத் தந்தார்.

**செயல் :** உனது துன்ப, துயர வேதனைகளை பிறருடைய ஈடேற்றத்திற்காக ஒப்புக்கொடு

**செபம் :** "ஆண்டவரே, நான் உம்மீது நம்பிக்கை வைத்துள்ளேன். என் வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் உமது கையில் உள்ளது".

### 20.03.2014 – தவக்காலத்தின் 16ம் நாள்

**வாசகங்கள்**

எரே 17:5-10 திபா 1:1-4.6 லூக் 16:19-31

**சிந்தனை :**

பல வேளைகளில் நாம் எமது பலத்திலும் எம்மிடம் இருப்பவை மீதும் பிறர் மீதும் மட்டும் நம்பிக்கை வைத்து எமது வாழ்வை திட்டமிடுகின்றோம்.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்...




# தவக்காலச் சிந்தனை 2014

ஜெராட் டீ ரொசாய்ரோ அ. ம. தி.

### "அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை இருள் சேர்ந்த இன்னா உலகம் புகல்"

அருள் நிறைந்த மனம் படைத்தவர் அறியாமை எனும் இருள் சூழ்ந்த துன்ப உலகில் உழலமாட்டார் என்பது இவண் நின்று நிலவும் நம்பிக்கையாகும். மனிதர் பெற்றுள்ள பெருங் கொடைகளுள் அளப்பரிய கொடை அவர் பெற்றுள்ள இறையருளாகும். மானிடரின் புறப்பயணத்திற்கு ஒளி அவசியமாகின்றது. அதேபோல், மானிடர் நிறை வாழ்வுக்கு பயணிக்க அவர்க்கு அக ஒளியாக இறையருள் வேண்டும். 2014ம் ஆண்டில் மலரும் தவக்காலம் நாம் பெற்ற இறையருளில் வாழ்க்கைப் பயணம் அமைந்துள்ளதா என சுயஆய்வு செய்வதற்குரிய காலமாகும். திருமுழுக்கு வழியாக இறையருள் நிறைவாகவே பொழியப்பட்டுள்ளது என்பது கிறிஸ்தவர்களின் நம்பிக்கையாகும். இதுவரை நாம் வாழ்ந்த வாழ்க்கை எதுவாயினும், நாம் பெற்றுள்ள இறையருளை பெற்றபெரு பேற்றாக எண்ணி, வளரும் தவக்கால நாட்களில் பயணிக்க இக்கட்டுரை உங்கள் சிந்தனைக்கு தூண்டுதல் அளிக்கும் என நம்புகிறேன்.

### அருள் பொழியும் இறைவன்

மனிதரிடம் எந்த தகுதியும் இல்லாமல் இறைவன் அவருக்கு அளிக்கும் கொடை அருளாகும். இறைவன் இஸ்ராயேலை மீட்பவராக (விப.34:14), உடன்படிக்கை செய்பவராக (விப.34:10) தம்மையே வெளிப்படுத்துவதில் இது புலனாகின்றது. இறைவனை தமது மக்களின் துன்பத்தில் தயவு நிறைந்தவராகவும், பேரன்பும் பிரமாணிக்கமும் மிக்கவராகவும் காண்கிறோம் (விப.34:6). இறைவன் ஆயிரம் தலைமுறைக்கும் தம் மக்களின் கொடுமையையும், குற்றத்தையும், பாவத்தையும் மன்னிப்பவர். இவ்விறைவன் போற்றுவதற்கும் (திபா.86:15; 103:8), மனந்திரும்புதலை எடுத்துக்கூறவும் உரியவர் (யோவே.2:13; மீக்.7:18; யோனா.4:2). இவ்வாறு இஸ்ரயேல் மக்களின் அடிப்படை இறைநம்பிக்கையில் இறைவன் அன்பின் கடவுளாகவும், அருளின் கடவுளாகவும் உள்ளார். அவரது அருள் உயிரைக்காட்டிலும் மேலானது (திபா.63:4). அருளின் விளைவாக இறைவன் அவர்களுக்கு சமாதானமாவும், மகிழ்ச்சியாகவும் விளங்குகிறார்.

இஸ்ரயேல் தீமையில் வாழ்நாட்களைக் கழிக்கின்றனர் (எரே.6:7). இந்நிலையில் இறைவன் மனிதரால் அடிப்படையில் செய்ய முடியாத ஒன்றைச் செய்கிறார் (எசே.16:3..). அதற்கும் மனிதரையே பயன்படுத்துகிறார். கல்லான இதயத்தை நீக்கி (எரே. 5:1), அவரை அறியக் கூடிய புதிய இதயத்தை அமைக்கிறார் (எரே. 31:31; ஓசே.2:21). இது ஆண்டவரது நீதியே உலகிற்குள் வருவதாகும் (எச.45:8,24; 51:6). மனிதரை உயர்நிலைக்கு உயர்த்துவதாகும்.

### அருளின் நிறைவு இயேசு

இந்த அருளைத்தான் இயேசு நிறைவு செய்கிறார் (யோவா.1:16). இறை அன்பில் அனுப்பப்பட்டு (யோவா.3:17), ஊழியனாகி (மாற்.10:45) அவரது வாழ்வாலும், போதனையாலும், அருஞ்செயல்களாலும் இறையருளை வெளிப்படுத்தினார். இஸ்ரயேலில் தவறிப் போனவர்கள் (மத்.9:36; 10:6; லூக்.15:4; யோவா.10), எளியோர் (மத்.19:21), சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் (லூக்.5:30-32) ஆகியோரைத் தேடுவதில் அவரில் அவரால் இறையருள் வெளிப்படுகிறது. இயேசு சிலுவைச் சாவை விரும்பி ஏற்க, அவரது உயிர்த்தெழுதலில் இறையருள் வெளிப்படுகிறது. ஆக, இயேசுக்கிறிஸ்துவில் ஓர் புதுயுகம் தொடங்கி வைக்கப்படுகிறது. இயேசுக்கிறிஸ்துவில் இறைவனின் அருள் பங்காளிகளையும், ஒரு பரிமாற்றத்தையும் தேடுகிறது.

### அருளை வாழ்வாக்கிய புனித பாவுலு

இயேசுக் கிறிஸ்துவில் இறையருள் சிலுவை வழியாக வருகிறது என்பது பாவுலுவின் நம்பிக்கையாகும் (கலா.2:20; உரோ.5:9; எபே.1:20). மீட்பின் நடுவரும், இடையாளருமான கிறிஸ்துவில் அனைவரையும் இறைவன் தம்மோடு ஒப்புரவாக்க இசைந்துள்ளார் (2கொரி.5:18-21). எனவே, இயேசுக் கிறிஸ்துவில் வெளிப்படும் இறையருளை இறை அன்பிலிருந்து பிரிக்க முடியாது என்கிறார் பாவுலு (உரோ.1:7; 1கொரி.1:3). இரக்கத்திலும், அன்பிலும் செல்வந்தராகிய இறைவன் சினத்துக்கு ஆளாகியிருந்த மக்களை உயிர்பெறச் செய்கிறார் (எபே.2:4-5).

இந்த அருள் விசுவாசத்தால் பெறப்படுகிறது (எபே.2:8). விசுவாசத்தால் ஒருவர் அருளின் வளத்தை அனுபவிக்கிறார் (உரோ.5:17; எபே.1:7; 27). சட்டமனப்பான்மையாலோ (கலா.2:21; 5:4), அல்லது கடமை தவறுதலாலோ (1கொரி.15:2; 2கொரி.6:1), விசுவாசமின்மையாலோ ஒருவர் இவ்வருளை வீணாக்கக்கூடும். ஆயினும், அருளின் வளம் ஒவ்வொருவருக்கும் போதும் என நம்பலாம் என்பதால் (1திமொ.1:15-16) ஒரு விசுவாசி இறையருளில் நம்பிக்கை தவறக்கூடாது. மாறாக, இறைவனின் அருள் வள்ளண்மை ஒன்றையே நம்பி வாழவேண்டும் (எபி.11:6; 10:29; 12:15). அவரது உள்ளத்தை அருளால் உறுதிப்படுத்தவேண்டும் (எபி. 13:9).

கைமாறு கருதாது விரும்பித் தரப்பட்ட அருள் மனித மீட்பின் இரகசியமாகும். அதே அருளை ஒவ்வொரு விசுவாசியும் பெற்ற பெரும் பேற்றை பெறுக இவ்வையகம் என வாழவேண்டும் (உரோ.12:6; எபே.6:7). இறைவனின் அருள் நமது வலுவின்மையிலும் சிறந்தோங்குவதால் அவரருள் ஒன்றே நமக்குப் போதும் (2கொரி.12:9). அது ஒரு போதும் குறைவுபடுவதில்லை. இறையருளானது புதிய வாழ்வுக்குப் பிறப்பாகும் (யோவா. 3:3). இறையருள் நம் அனுபவங்கள் அனைத்தையும் காட்டிலும் மேலானது. நிறைவானது. சிலுவையில் இயேசுவில் மனதுவைத்து உள்மனப்பயணம் செய்ய, "அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை இருள் சேர்ந்த, இன்னா உலகம் புகல்'' என வாழ இத்தவக்காலம் மீண்டும் களமாகின்றது.

---

## இனிய இசையில்



ரு.்.ப்ட் பல்கலைக்கழகத்தில் ஓர் ஆராய்ச்சி செய்தார்களாம். அது சாப்பாட்டிற்கும், இசைக்கும், உடலுக்கும் உள்ள தொடர்பு பற்றிய ஓர் ஆராய்ச்சி. இதற்காக ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்து முதல் குழுவினரை சத்தமில்லாத சாதாரணமான சூழ்நிலையில் சாப்பிட வைத்தார்கள். இரண்டாவது குழுவினரை டிஸ்கோ, பாப் போன்ற சத்தமான பாடல்கள் பாடிக்கொண்டிருந்த சூழ்நிலையில் சாப்பிட வைத்தார்கள். மூன்றாவது குழுவினரை மிகவும் மென்மையான புல்லாங்குழல் இசைக்கும் சூழலில் சாப்பிட வைத்தார்கள். முதல் இரண்டு குழுக்களைச் சேர்ந்தவர்கள் சீக்கரமாகச் சாப்பிட்டுவிட்டு மறுபடியும் சாப்பாடு வாங்கிச் சாப்பிட்டார்களாம். மூன்றாம் குழுவைச் சேர்ந்தவர்கள் மெதுவாகச் சாப்பிட்டதோடு இரண்டாம் முறை பெறுவதையும் தவிர்த்து விட்டார்களாம். பலமுறை பல குழுக்களுக்குச் செய்யப்பட்ட இந்த ஆய்வின் மூலம் மெல்லிசையைக் கேட்டுகொண்டே சாப்பிடுவதால் சாப்பாடும் சுவையாகத் தெரிகிறதாம். வயிறும் நிரம்புகின்றதாம். ஜீரணக் கோளாறுகள் எதுவும் வருவது இல்லை என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இனிய இசை மனதிற்கு அமைதி தருகிறது. இசைக்கு மயங்காதவர்கள் இருக்க இயலாது. தாவரங்களின் வளர்ச்சி கூட இசையால் அதிகரிக்கின்றது என்று பல ஆராய்ச்சிகள் நிரூபிக்கின்றன.

**சிரிப்பு ஒலிக்கும் வீட்டில் சூரியோதயம் நிலைத்து விட்டது என்று அர்த்தம்.**

---

குடும்பம் அங்கம் 71

# குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா
உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.

## பின்னூட்டல்



கணவன் மனைவி உறவுக்கு பின்னூட்டல் மிக முக்கியமானது. சிலர் தமது கணவன் அல்லது மனைவி தவறு விடும்பொழுது அன்றே அதை அவருக்கு நீங்கள் செய்தது தவறு என்று உணர்த்துவதில்லை. இது தவறாகும். சொல்லுவதற்கு ஏற்ற சூழல் இல்லாததால் அவருக்கு அதை உணர்த்தாமல் நாட்கள் கடந்து செல்ல இடம் கொடுக்கின்றனர். உதாரணமாக தனது கணவனுக்கு வேறொரு பெண்ணோடு தொடர்பு இருப்பதாக உறவினர் மூலம் செய்தி கிடைக்கிறது. வேறு பெண்ணுடன் தொடர்பு வைப்பது எனக்குப் பிடிக்கவில்லை என்பதை மனைவி கணவனுக்கு உணர்த்தவில்லை. சில நாட்களின் பின் உண்மையாகவே கணவன் அந்தப் பெண்ணுடன் ஆழமான உறவு வைத்துவிட்டான். செய்தி அறிந்த அன்றே அன்போடு மனைவி தனக்குப் பிடிக்கவில்லையென்று எதிர்ப்பைத் தெரிவித்திருந்தால் அப்பெண்ணோடு உள்ள உறவை ஆரம்பத்திலேயே முறித்திருக்கலாம். காலம் கடந்தபின் கவலைப்பட்டுப் பிரயோசனம் இல்லையல்லவா!

ஒரு கூட்டத்தில் பேச்சாளரின் உரை நன்றாக இருக்கும்போது கைகளைத் தட்டுவதன் மூலம் பேச்சாளருக்குப் பின்னூட்டல் கொடுக்கின்றோம். இது வளர்ந்து செல்லும் பின்னூட்டலாகும். அதாவது இன்னும் பேசுங்கள் உங்கள் பேச்சு நன்றாக இருக்கின்றது என்ற நல்ல பின்னூட்டலாகும். அதேநேரம் பேசும்பொழுது மற்றவர்கள் நித்திரை கொண்டு, அடிக்கடி கொட்டாவி விட்டுக்கொண்டு கையிலுள்ள கடிகாரத்தை அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தால் இது குறைந்து செல்லும் பின்னூட்டல் ஆகும். பேச்சாளரும் இதை உணர்ந்து தனது பேச்சை முடித்துக் கொள்வார். பின்னூட்டலைக் கொடுக்காது மூடி மறைத்தால் மற்றவர் உங்களுக்குப் பிடிக்கவில்லை என்பதை எப்படி அறிந்து கொள்வது?

சிலர் எதற்கெடுத்தாலும் பிழையான பின்னூட்டலே கொடுப்பர். போலியாக மற்றவருக்குப் பயத்தில் செய்வது, சொல்வது எல்லாம் சரி, சரி என்று கூறுவர். ஆனால் உள் மனதிலோ அவர் செய்வது எனக்குப் பிடிக்கவில்லை என்று மனதில் புழுங்கிக் கொண்டிருப்பர். சரியான நேரத்தில் அன்போடு மற்றவரது தவறை உணர்த்தும்போது அது ஆரோக்கியமான பின்னூட்டலாகும். இது உறவை வளர்க்கும். சிலர் மனதிலே வைத்துக் கொண்டிருப்பர். சொல்லமாட்டார்கள். இதனால் மற்றவருக்கு எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. அதேபோன்று எமது பிள்ளைகள் தவறுவிடும்பொழுது அவர்களைத் திட்டாது நல்ல பின்னூட்டலைக் கொடுக்க வேண்டும். அதாவது இது அவ்வளவு நல்லதல்ல. ஆனால் இப்படிச் செயற்படுவது நன்றாக இருக்கும் என்று அன்போடு உணர்த்தி, பாராட்டி, தட்டிக்கொடுத்தால் எமது பிள்ளைகள் வளர்வார்கள். இதை மனதிலே கொண்டு

**சிந்திப்போம்**

**செயற்படுவோம்**

தொடரும்...




## பொதுக்காலத்தின் எட்டாவது ஞாயிறு (02.03.2014)

**வாசக விளக்கம்:** இஸ்ரயேலே நான் உன்னை மறக்கவில்லை நான் உன்னைக் காப்பேன். என்ற இறைவனின் அன்புக்கரம், தான் தேர்ந்துகொண்ட மக்களோடு என்றும் இருந்தது எனக் கூறும் இன்றைய முதல் வாசகம் தாய் தன் பிள்ளைகளை பேணிக் காப்பது போல் கடவுள் தன் மக்களை கண்ணின் மணிபோல் கருத்தாய் காத்து வந்தார் என விளக்குகின்றது. கிறிஸ்துவின் சீடர்களாக வாழ நாம் எவ்வாறு நடந்து -கொள்ள வேண்டும் என்பதை விளக்கும் இன்றைய இரண்டாம் வாசகத்தால் தூய பவுல் அடியார் நாம் பெற்றுக்கொண்ட அழைப்பிற்கேற்ப நம்பிக்கைக்கு உரியவராய் இருக்க வேண்டும். ஏனெனில் நமது மனச்சாட்சி ஆண்டவரின் பிரசன்னத்தில் நம்மைத் தீர்ப்பிடுகின்றது என விளக்குகின்றார். நமது வாழ்வில் நம்பிக்கையூட்டும் இன்றைய நற்செய்திப் பகுதியானது இயேசுவின் வார்த்தையில் நம்பிக்கை வைக்க நம்மை அழைக்கின்றது. “கவலை வேண்டாம் விண்ணில் உள்ளவையும் மண்ணில் உள்ளவையும் படைத்துப் பராமரிப்பவர் நம்மையும் பராமரிப்பார்” என்ற நம்பிக்கையில் நம் வாழ்வை நடத்த இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் :** எசா 49:14-15

நான் உன்னை மறக்கவே மாட்டேன்

**பதிலுரைப்பாடல் :** என் நெஞ்சே கடவுளுக்காக மௌனமாய்க் காத்திரு.

**இரண்டாம் வாசகம் :** 1 கொரி 4:1-5

ஆண்டவர் உள்ளத்தின் நோக்கங்களை வெளிப்படுத்துவார்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது. ஆற்றல் வாய்ந்தது. உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கின்றது அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் :** மத் 6:24-34

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

அன்பின் திருச்சபைத் திருக்கூட்டத்தை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் இறைப்பராமரிப்பில் நம்பிக்கை கொண்டு இறைதிட்டத்தை வெளிப்படுத்தி அன்பின் பாதையில் அனைவரையும் வழி நடத்திச் செல்ல வரமருள வேண்டுமென்று...

இன்று நாம் வாழும் எமது நாட்டின் சூழலைப் புரிந்து கொண்டு இறைவனின் பராமரிப்பில் அவரது வழிநடத்தலில் நம்பிக்கை கொண்டு வாழவும், இன்னலுறும் மக்களுக்காக எம்மால் இயன்றதை செய்யவும், வறியவர், நோயாளர், முதியோர், கைவிடப்பட்டோர் என அனைத்து மக்களையும் ஆதரித்து அன்பு செய்யவும் வேண்டிய நல் மனதைத் தந்தருள வேண்டுமென்று...

நாம் வாழுகின்ற இந்த வாழ்வு கடவுள் தந்த வாழ்வு என்பதை உணர்ந்தவர்களாக ஆண்டவர் மீது முழு நம்பிக்கை கொண்டு வாழவும், கடவுள் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார் என்பதை நம்பவும், என்ன நேர்ந்தாலும் எப்போதும் இறைவனுக்கு நன்றி கூறி வாழவும், வேண்டிய வரங்களை எமக்குத் தந்தருள வேண்டுமென்று...

## தவக்காலத்தின் முதல் ஞாயிறு (09.03.2014)

**வாசக விளக்கம்:** மனிதன் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற குறிக்கோளோடு கடவுள் தனது சாயலாக மனிதனைப் படைத்தார். அனைத்துப் படைப்புக்களையும் கொடுத்து அவற்றை ஆண்டு நடத்தவும் பேணிக்காக்கவும், கட்டளையிட்டார். ஆனால் மனிதன் தனது சுய விருப்பால் கடவுளின் கட்டளையை மீறினான். சாத்தானின் சூழ்ச்சிக்குப் பலியானான். மனுக்குலமே சோதனைக்கு உட்படுத்தப்பட்டது இதை விபரிக்கின்றது இன்றைய முதல் வாசகம். ஆதாம் ஒரு தனி மனிதன் அல்ல மனுக்குலத்தின் தந்தை. எனவே ஆதாம் செய்த தவறு அவரை மட்டும் பாதிக்கவில்லை மாறாக மனுக்குலத்தையே பாதித்தது எனக் கூறும் பவுல் அடியார் ஆதாமினால் மனித குலம் பாவத்தில் வீழ்ந்தது. ஆனால் கிறிஸ்து சாவைவென்று புதுவாழ்வை அளித்தார் என இரண்டாம் வாசகத்தில் விளக்குகிறார். எமது ஆதிப்பெற்றோர் சாத்தானால் சோதிக்கப்பட்டனர். சத்தான் வெற்றி கொண்டான். ஆனால் இயேசு மூன்று சோதனைகளிலும் கடவுளை மையப்படுத்தி பிறர் மீது கொண்ட அன்பினால் பொது நலத்தினால் வெற்றி கண்டு தான் இறைமகன் என்பதை நிரூபித்து விடுகின்றார் என நற்செய்தி பறை சாற்றுகின்றது. நாமும் சோதனைகளை எதிர்கொள்ளும் திட மனதை வேண்டித் திருப்பலியில் பங்கெடுப்போம்.

**முதல் வாசகம் :** தொ.நூல் 2:7-9, 3:1-7

முதல் பெற்றோரைப் படைத்ததும் அவர்களின் பாவமும்

**பதிலுரைப்பாடல் :** ஆண்டவரே இரக்கமாயிரும். ஏனெனில் நாங்கள் பாவம் செய்தோம்.

**இரண்டாம் வாசகம் :** உரோ 5:12-19

பாவம் பெருகிய இடத்தில் அருள் அணை கடந்து பெருக்கெடுத்தது.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல மாறாக கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் :** மத் 4:1-11

### விசுவாசிகளின் மன்றாட்டு


பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

திருச்சபை என்னும் பெருங்குடும்பத்தை சேர்ந்த ஒவ்வொருவரையும் நிலைவாழ்வுக்கு அழைத்துச் செல்லும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் இத்தவக் காலத்தில் பாவச் சோதனைகளையும் சாத்தானின் சூழ்ச்சிகளையும் வெற்றிக் கொண்டு வாழத் தேவையான வரங்களை பொழிந்தருள வேண்டுமென்று...

கிறிஸ்தவ மக்களாகிய நாமனைவரும் இத்தவக்காலத்தில் “ஆண்டவரே இரக்கமாயிரும், ஏனெனில் நாங்கள் பாவம் செய்தோம்” என்ற மனநிலையோடு எமது பாவங்களுக்காக மனமாறவும் செப, தப, தர்ம தானங்களில் ஈடுபடவும் திட மனதுடன் எமக்கு வரும் சோதனைகளை எதிர்கொள்ளவும் வேண்டிய வரங்களை எமக்குத் தந்தருள வேண்டுமென்று...

எல்லாவித சோதனைக்கு உட்பட்டாலும் இயேசு பாவத்தில் விழவில்லை. அவரைப் போல நாமும் இடைவிடா செபத்தின் வழியாக இறைவன் மீது உண்மையான நம்பிக்கை கொண்டு சோதனைகளை சாதனைகளாக மாற்றி எம் வாழ்வில் வெற்றி பெறத் தேவையான அருள் வரங்களை எமக்குத் தந்தருள வேண்டுமென்று...

# இலங்கையின் புராதன கிறிஸ்தவ சின்னம் அநுராதபுரச் சிலுவை



**அதிமேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை (முன்னாள் பேராயர்)**

தமிழில் அருட்தந்தை அ. உதயதாஸ்

எமது நாட்டில் கொடி, முத்திரை, அதிகாரச் சின்னம் போன்றன அக்காலத்திலிருந்தே பாவனையிலிருந்து வந்துள்ளது. இதில் கத்தோலிக்க கொடியும் பலவாயிருந்தது. இதில் இரண்டைப் பற்றி 1916இல் E.W பெரேரா அவர்கள் வெளியிட்ட “சிங்களக் கொடி மற்றும் முத்திரை” எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இதில் ஒன்று சூரிய சந்திர சின்னமும், சிலுவையும் அதோடே சிறு நற்கருணைப் பேழையும் என்ற கொடி (57வது படம்) இரண்டாவது சிலுவையைச் சுற்றி பூக்களும், நட்சத்திரங்களும் (58வது படம்) ஆகும்.

இக்கொடிகள் ஒல்லாந்த அடக்கு முறைகளுக்குப் பயந்து மனம்பிட்டியவின் தமங்கவே கிராமத்தில் குளத்திற்கு மத்தியில் தங்கியிருந்த இலங்கையின் கரையோரப் பகுதியில் வாழ்ந்த கத்தோலிக் -கருடையது என நம்பப்படுகிறது. ஆனால் தற்போதைய பரிசோதனைகளின் படி இவை இதைக் காட்டிலும் காலத்தால் முந்திய அனுராதபுர, சிகிரிய பிரதேசங்களில் வாழ்ந்த மக்களுடையதோ என்ற கேள்வியும் எழுகிறது. இது எவ்வா -றாயினும், தற்காலத்திற்கு பொருத்தமான கொடியொன்றை கத்தோலிக்கர் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்து நிலவியது. இதேவேளை இதுவரை கத்தோலிக்க விழாக்களின் பயன்படுத்தப்பட்ட கொடி “பாப்பரசர் கொடியே” ஆகும். இது முன்பிருந்தே பாப்பரசர் கொடி எனப்பட்டாலும் கி.பி 1929ல் வத்திக்கான் இத்தாலியில் இருந்து பிரிக்கப்பட்டு பிரிதொரு நாடாக (உலகத்தில் மிகச் சிறிய நாடு) ஏற்படுத்தப்பட்டதன் பின்னர் திருத்தந்தை 11ஆம் பத்திநாதர் (பயஸ்) பாப்பரசர் அக்கொடியை வத்திக்கானது கொடியாகவும் அங்கீகரித்தார். அதிலிருந்து வத்திக்கான் அரச கொடியாகவும், அது மாறியது. எமது கத்தோலிக்க விழாக்களில் இன்னுமொரு அரச கொடியை ஏற்றுவதைக் காட்டிலும் எங்களது கத்தோலிக்க கொடியை ஏற்றுவது நல்லது என இலங்கையின் கத்தோலிக்க ஆயர் மன்றம் ஏற்றுக்கொண்டது. ஆகவே எமது நாட்டுக் கொடியான சிங்கக் கொடியை ஏற்றும் நேரத்தில் எமது கத்தோலிக்க கொடியையும் ஏற்றுவது பொருத்தமாகும்.

எமது கத்தோலிக்க கொடியில் இருக்கும் நிறங்கள், சின்னம் பற்றி ஏற்கனவே நாம் பார்த்தோம். ஆனாலும் அதிலுள்ள சிலுவைச் சின்னத்தைப் பற்றி நாம் குறிப்பிட்டாக வேண்டும். இந்த சிலுவைச் சின்னம் மிகவும் முக்கியமானது. இதை அநுராதபுர அகழ்வில் கி.பி 1912இல் P. D.A விக்கிரசூரிய அவர்களால் கண்டெடுக்கப்பட்டதாகும். அன்றைய அகழ்வாராச்சியில் நிர்வாகியாக இருந்து அவர் அத்திணைக்கள பிரதானியாக இருந்த E.R. அயர்டனிடம் கையளித்தார். அயர்டன் இது போர்த்துக்கேயருடைய சிலுவையாக இருக்கலாமோ என சந்தேகித்தார். ஆனால் அவருக்குப் பின் அதன் பிரதானியாக A.M கொகாட் அவர்கள் இது பற்றிய ஆழமான பரிசோதனையை 1924இல் மேற்கொண்டு அகழ்வாராச்சிக் குறிப்பேட்டில் பின்வருமாறு குறிப்பிட்டார். “F7 எனும் பிரதேச மட்டத்தில் இருந்த சிலுவை அடையாளம் பொறித்திருந்த பகுதியானது தூணின் ஒரு பகுதியாகும். இதில் படியுடன் கூடிய பாதத்தை உடையதும் மலர் வடிவம் கொண்டு பக்கமும் கொம்புகள் போன்று விரிந்த கிளைகளையும் கொண்டதாக அமைகிறது” “இதை வீட்டின் தூணா -யிருக்கும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இது இதன் அருகாமையில் அமைந்த பெரியதொரு கட்டித்தின் பகுதியாகவே இருக்க வேண்டும். நான் நினைக்கிற வரை இது தேவாலய தூணாகவும் இருக்கக் கூடும்”



### முதலாவதாக,

17ஆம் நூற்றாண்டின் முதல் பகுதிகள் வரை போர்த்துக்கேயரால் அநுராதபுரத்தை கண்டுபிடிக்க முடியாது போனது. அநுராதபுரம் பற்றி முதலில் கூறும் ஐரோப்பியராக கி.பி 1610 - 1629 வரை இலங்கையில் பணிபுரிந்த பிரான்சிஸ்கன் துறவியான அருட்திரு நெக்ராவ் எனும் கத்தோலிக்க குருவேயாவார். மேலும் குவேரஸ் எனும் வரலாற்றாசிரியர் போர்த்துக்கேய அரசன் அநுராதபுரத்தை கண்டுபிடிக்கும்படி ஆணை பிறப்பித்திருந்தும் அவர்களால் அதைக் கண்டுபிடிக்க முடியாது போனதென்று குறிப்பிடுகிறார்.

### இரண்டாவதாக,

கொகாட் அநுராதபுர சிலுவையை பரிசோதித்து அதற்கும் கோட்டே சிலுவைக்கும் இடையிலான தொடர்புகளை விபரித்தார். எனினும் கோட்டே சிலுவை போர்த்துகேயரின் சிலுவையன்று. அது புனித தோமஸ் அப்போஸ்தலருடையது. அது போர்த்துக்கேயர் இங்கு வர முன்னரே இருந்ததொன்றாகும்.

இதேபோன்று புனித தோமஸ் அப்போஸ்தலருடைய உருவாக்கத்தில் அமைந்த சிலுவைகள் இரண்டு இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டது. வரலாற்றாசிரியரான குரேரொஸ் இது பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

“கொழும்பு புறநகர்ப் பகுதியில் புனித தோமஸ் முனிவரது பெயருக்கு அர்ப்பணிக்கப்பட்ட தேவாலயமாகும். அங்கே குருவானவரும் இருந்துள்ளார். மேலும் முனியோரால் செய்யப்பட்ட சிலுவையும் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. இது இலங்கையில் இருந்த அப்படிப்பட்ட இரண்டாவது சிலுவையாகும் (குவேரொஸ் 715ஆம் பக்கம்)

இலங்கையைப் பற்றியும் இந்திய தேசத்தின் சிறிய கத்தோலிக்க மரபு பற்றியும் ஆழமான ஆராய்சியை மேற்கொண்ட H.W கொட்ரின்ரன் இந்த அநுராதபுரச் சிலுவையை புனித தோமஸ் முனிவோருடைய படிப்பினைகளின் படி கிறிஸ்தவர்களான பேர்சியர்களுடைய சிலுவை என்றும் அது புனித தோமஸ் முனியோரால் தென் இந்தியாவின் மயிலாப்பூர் பிரதேசத்தில் காணப்படும் சிலுவையோடு ஒத்துள்ளது என்னும் குறிப்பிட்டுள்ளார். மயிலாப்பூர் சிலுவையை போர்த்துக்கேயர் கி.பி 1547இல் கண்டுபிடித்தனர். தற்போது இடம்பெற்ற ஆராய்சிகளின்படி இவ் அநுராதபுர சிலுவை நெஸ்டோரிய கிறிஸ்தவர்ளுடையதல்ல என்னும் அது கத்தோலிக்கருடையது என்னும் வெளியாகி உள்ளது. நெஸ்டோரிய சிலுவையின் மேற்பகுதியில் பரிசுத்த ஆவி -யின் சின்னமான புறாவடிவமும் இருக்கும். ஆனால் இங்கு அவ்வாறில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். இலங்கையில் இதுவரை கிடைக்கப்பெற்ற புராதனக் கிறிஸ்தவ சின்னம் இதுவேயாகும். ஆகவே இலங்கையில் ஆதிகாலத்திலிருந்தே எமது இருப்பை நினைவூட்டும் வகையில் இச்சின்னத்தை எமது கொடியில் பதித்துள்ளோம்

# இறைவனைச் சந்திக்க



நுழைவாயில்




திவ்விய நற்கருணை மண்டபம்


மீன் தொட்டி


சினகோகே மண்டபம்


மிதக்கும் தியான மண்டபம்


தியான மண்டபம்


உள்ளக அரங்கின் முற்பகுதி

உள்ளக அரங்கு


உள்ளக

திறந்தவெ

## சுப்புவத் அரண

- இது கொழும்பு உயர் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க சேவையின் கீழ் 2000ஆம் ஆண்டு அப்போதிருந்த பேராயர் அதிமேதகு நிக்கலஸ் மாக்கஸ் பர்னாந்து ஆண்டகையின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.
- இது 2007ஆம் ஆண்டு அப்போதிருந்த பேராயர் அதிமேதகு ஓஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகையினால் ஆசீர்வதிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்ட ஒரு தியான இல்லமாகும்.
- பின்பு 2013ஆம் ஆண்டு மார்கழி மாதம் 11ஆம் திகதி கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் ரஞ்சித் கர்தினால் ஆண்டகை இப்புண்ணிய பூமியை ஆசீர்வதித்து, இறைவனுக்கு நன்றி கூறும் முகமாக அன்றைய தினம் மாலை 7.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுத்தார்.

### இதன் நோக்கம்

- விசுவாசிகளை ஆன்மீக ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் முழுமையடைந்த மக்களாக உருவாக்குவதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றும் ஒரு நிலையமாகும். இறைவனின் அன்பை அனுபவிப்பதன் மூலமாக விடுதலை வாழ்விற்கு அவர்களை உட்படுத்த, இறைவரப்பிரசாதம் நிறைவாக பெற்றுக் கொள்ள "சுப்புவத் அரண" ஊன்றுகோலாக இருக்கின்றது.
- "சுப்புவத் அரண" கிழமைகளில் ஒவ்வொரு நாளிலும் செபிப்பதற்காகவும், தியானத்திற்காகவும் திறந்து வைக்கப்பட்டிருப்பதுடன், அனைவரும் அமைதியாகவும், ஆன்மீக சுகத்தை அனுபவிக்கக் கூடியதான சிறந்த சுற்றுச் சூழலைக் கொண்டு நிர்மானிக்கப்பட்டிருக்கிறது.
- "சுப்புவத் அரண"க்கு வருகை தரும் நீங்கள் உங்களுக்கு தேவையான அறிவுறுத்தல்களை எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடியதோடு, மேலதிக விபரங்களுக்கு எமது இணையத் தளத்தை நாடக் கூடியதாகவும் உள்ளது. எமது இணையத்தள முகவரி : www.supuwatharana.org
- ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் மாலை 7.00 மணிக்கு வழிபாட்டுடன் கூடிய இறைவார்த்தையை பகிர்தல் நடைபெறும்.
- ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் காலை 7.00 மணிக்கு இறை-வார்த்தையைப் பகிர்ந்து கொள்ளுதலும், அதனைத் தொடர்ந்து திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும்.


தியான மண்டப பகுதி


தங்குமிட வசதி

"சுப்புவத் அர


திவ்விய நற்க
எழுந்தேற்றப்ப


ஜெஸ்தமனித் தோட்டம்


திருக்குடும்பமும் அதன் சிறிய

## விவிலிய கிராமத்தில் திவ்விய நற்கரு



விவிலிய கிராமத்தின் நுழைவாயில்


இயேசுவின் பிறப்பு


இயேசுவின் திருமுழுக்கு



மலைப்பொழிவும், ஐயாயிரம் பேருக்கு உணவளித்தலும்


பாதம் கழுவுதலும், இறுதி இராவுணவும்


இயேசு சிலுவையில் தொங்குதல்

# வாருங்கள்







## ண"யில் ஆன்மீக யாத்திரை




## ண வாழ்வை அனுபவிப்போம்




# விசுவாசத்தின் ஒளி

## திருத்தூது மடல் பகுதி 01

## அன்பினில் நம்பிக்கை வைத்தோம் (1யோவா 4:16)

### 19. விசுவாசம் வழியே மீட்படைதல்

இயேசுவின் வழியில் பிறவற்றைக் காண்பதைப் பகிர்ந்து கொள்ளும் அடிப்படையில், புனித பவுல், விசுவாச வாழ்வென்றால் என்னவென்பதை விவரித்துள்ளார். விசுவாசமெனும் கொடையை ஏற்றுக் கொள்ளும்போது நம்பிக்கையுடையோர் புதிய படைப்பாக உருவாகின்றனர். புதிய வாழ்வைப் பெறுகின்றனர். “கடவுளின் பிள்ளைகள்” எனவும், “மகனில் இணைந்த பிள்ளைகள்” எனவும் அழைக்கப் பெறுகின்றனர். “அப்பா தந்தையே” என அழைக்கும்போது (உரோ 8:15) கிறிஸ்து அடைந்த அனுபவங்களையும் நமதுள்ளத்தில் பெற்று வாழ்கின்றோம். விசுவாச வாழ்வு என்பது, உரிமைப் பேறாகக் கொண்டது மட்டுமல்ல, ஒரு அடிப்படையினை அடித்தளமாகக் கொண்ட வாழ்வுக்கான அருட்கொடையை நமக்கு வழங்குவதாகும். இதனைக் கொரிந்தியருக்குப் புனித பவுல் விடுக்கும் வினாவில் காணலாம். “நீங்கள் பெற்றுக் கொள்ளாதது என்று ஏதேனும் உங்களிடம் உள்ளதா” (1கொரி 4:7) என்று புனித பவுல் பரிசேயர்களிடம் எழுப்பிய வினாக்களில் ஆழமான சிந்தனை உடையது. இது அதாவது இரட்சிப்பு என்பது திருச்சட்டத்தினைக் கடைப்பிடிப்பதாலா அல்லது ஆழ்ந்த நம்பிக்கையினாலா என்பதாகும். அவரவர் செய்த அறச்செயல்களை முன்னிட்டுக் கடவுள் முன்னர் நீதி பெற முடியும் எனும் மனப்போக்கைப் புனித பவுல் ஒதுக்கிவைக்கிறார். திருச்சட்டத்தைக் கடைப்பிடித்தும், அறச்செயல்களைச் செய்துவந்தும், இத்தகைய மக்கள் சுயநலப்போக்கைக் கடைப்பிடிப்பவர்கள் தாம், நல்லதென்பவை அனைத்தும் கடவுளிடமிருந்தே வருகிறது என்பதை அறியாதவர்கள். தமது சொந்த நற்செயல்களில் மட்டும் நம்பிக்கையுடைய சிலர், அதன்படியே வாழ்ந்துவரும்போது மிக விரைவில் நற்செயல்கள் கரைந்து போக, திருச்சட்டத்தையும் கடைப்பிடிக்க இயலாத நிலைக்கு ஆளாகின்றனர். அவர்கள் அவர்களையே சார்ந்து வாழ்ந்து கொண்டு, கடவுளிடமிருந்தும் பிறரிடமிருந்தும் தனிமைப்படுத்திக் கொள்கின்றனர். அவர்கள் வாழ்க்கையே வெறுமையாக்கி, நீரின்றி வாடி பட்டுப்போய் நிற்கும் தாவரங்கள் போல, பயனற்றுப் போகின்றார்கள். புனித அகுஸ்தீனார் தனக்கே உரித்தான சவுக்கடி கொடுக்கும் பாணியில் கூறுகிறார். “உங்களையே நீங்கள் சார்ந்து வாழமுடியுமானாலும், உங்களைப் படைத்த ஒருவரிடமிருந்து விலகி நிற்காதீர்கள்” என்று “கடவுளிடமிருந்து விலகி இருக்கவும் ஒருவேளை நான் தீர்மானித்தால், என்னை நானே கண்டு கொள்வேன். என் வாழ்க்கை இனி சீரழிந்து போகும் என்பதையும் அறிவேன்” (லூக் 15:11-24 ஊதாரி மகன் உவமை) என்பதை சிந்தியுங்கள். மீட்பின் தொடக்கம் என்பது நான் உருவாகு முன்பே திறக்கப்பட்ட ஒன்று, அது நிலைத்து வாழ்வதற்காக, என்றோ அளிக்கப்பட்ட மாபெரும் கொடை ஆகும். நாம் மனம் திறந்து, அதனை ஏற்று இருத்திக் கொண்டால் மட்டுமே நாமும் மனமாற்றம் பெற்று, மீட்பை அனுபவித்து நற்கனிகளைக் கொடுக்க முடியும். விசுவாசத்தின் வழியே மீட்பு என்பது, கடவுள் அருளும் கொடையினை மிக உயரிய நிலையில் ஏற்றுக் கொள்ளுதல் என்பதாம். இதனைப் புனித பவுல், “நீங்கள் அந்த அருளாலேயே நம்பிக்கையின் வழியாக மீட்கப்பட்டிருக்கிறீர்கள். இது உங்கள் செயல் அல்ல. மாறாக, இது கடவுளின் கொடை” (எபே 2:8) என்கின்றார்.

20. விசுவாசத்தின் புதிய பார்வையானது, கிறிஸ்துவை மையப்படுத்தி மற்றவற்றைப் பார்ப்பது ஆகும். கிறிஸ்து மீது வைத்த விசுவாசம் மீட்பைக் கொண்டு வரும். ஏனெனில், அது நமக்கு வழிகாட்டும் உயரிய அன்பினில் நாம் காட்டும் அடிப்படையான ஆர்வமே என்பதுடன், நமக்குள் நம்மையே மனமாற்றம் செய்து, நம் வழியாக நம்மையே செயல்படுத்துவதாகும். பழைய ஏற்பாட்டின் இணைச்சட்டத்தில் இருந்து புனித பவுல் காட்டும் மேற்கோள் ஒன்று கடவுளுடைய கட்டளைகள் என்பது எட்டமுடியாததாகவோ, அடைய முடியாததாகவோ இல்லை என்று மோசே தம் மக்களிடம் கூறுகின்றார். “நமக்காக யார் விண்ணகத்துக்குப் போய், அதைக் கொண்டு வருவார்?” அல்லது “யார் கடல் கடந்து சென்று, அதை நம்மிடம் கொண்டு வருவார்?” என்றோ கூறியிருக்க வேண்டியதில்லை. (இச 30:11-14) கிறிஸ்துவர்களிடம் உள்ள கிறிஸ்துவின் பிரசன்னத்தில், கடவுளின் அருகாமையைப் பற்றி புனித பவுல் மொழிகிறார். “விண்ணகத்திற்குப் போகிறவர் யார்?” என்று உங்கள் உள்ளத்தில் கேட்காதீர்கள் (கிறிஸ்து இறங்கி வருவதற்காக) அல்லது “பாதாளத்திற்குள் இறங்கிச் செல்பவர் எவர்” (கிறிஸ்து மரித்தோரிடமிருந்து உயிர்த்து வர) - (உரோ 10:6-7) என்று மண்ணகத்திற்கு இறங்கி வந்த இயேசு மரித்தோரிடமிருந்து உயிர் பெற்றெழுந்தார். இதற்குத் தன்னுடலோடும் உயிர்ப்போடும் எழுந்தவர், மனித வரலாற்றிலும் வாழ்விலும் இணைந்து, இப்போது தூய ஆவி எனும் துணையாளராக நம் உள்ளங்களில் வாழ்கிறார் என்பதே உண்மை. கடவுள் நம்மை ஈர்த்துக் கொள்வதையும், கிறிஸ்து நமக்காக கொடையாக அளிக்கப்பட்டதையும், அதுவே மனமாற்றம் பெறச் செய்வதையும், நம் உள்ளத்தில் உறைந்தவாறு ஒளியேற்றிக் கொண்டிருப்பதையும், தொடக்க முதல் வாழ்வின் எல்லை வரை அவ்வொளியே தங்கி இருப்பதையும், விசுவாசத்தினால் மட்டும் அறிந்து கொள்ளமுடியும்.

தொடரும்...

# புனித பிரான்சிஸ் அசிசி – 18

கொள்ளையடிப்பதையே தொழிலாகக் கொண்டு வாழ்ந்த மூன்று தடியர்கள் ஒரு நாள் பிரான்சிசின் மடத்துச் ஜன்னலைத் தட்டினர். சகோதரர் ஒருவர் ஜன்னலைத் திறந்தார். அவர்கள் அச்சகோதரரிடம் சிறிது உணவு கேட்டனர். அதற்கு அச்சகோதரர், "வெளியேறுங்கள் திருடர்களே, கொலைக்கு அஞ்சாதவர்களே ஒழிந்து போங்கள், இறைவனின் தொண்டர்களுக்குரிய உணவை உங்களுக்குக் கொடுத்தலாகாது" என்று சொல்லி அனுப்பிவிட்டார். அவர்கள் அவரைக் கஞ்சன் என்று திட்டிக்கொண்டே சென்றுவிட்டனர்.

பிரான்சிசுக்கு இது தெரிய வந்தபொழுது மிகவும் வருத்தப்பட்டார். சகோதரரை நோக்கி "நீ ஓர் உண்மையான சகோதரரைப்போல் நடந்து கொள்ளவில்லை. நாம் பாவிகள் மட்டில் கனிவாய் இருந்து அவர்களைக் கடவுள் பக்கம் கொணரவேண்டும். எனவே, நீ போய் அவர்களைத் தேடிச் சிறிது உணவு கொடு" என்று கூறினார். எனவே சகோதரர் அவர்களை "குண்டர்களே எங்கேயிருக்கிறீர்கள்" எனக் கூப்பிட்டவாறு தேடிச் சென்றார்.

சகோதரர் வருவதைக் கண்ட அவர்கள் தங்களுக்குள்ளே, "நம்மை பின்தொடரும் அவனைப் பலமாய் அடிப்போம்" எனக் கூறினர். ஆனால் சகோதரர் "சகோதரக் குண்டர்களே, எங்கேயிருக்கிறீர்கள்" எனக் கூப்பிட்டவாறு சென்றார்.

இதைக் கேட்ட அவர்கள் ஆச்சரியமடைந்தவர்களாய், அவர் என்னதான் செய்வார் என நினைத்து அவர் அருகில் வந்தனர். அவர்கள் வந்ததும் அவர்கள் முன்னிலையில் சகோதரர் முழந்தாளிட்டு உணவுப் பொருட்களை அவர்களுக்குக் கொடுத்தார். "இது உங்களுக்குத் தான் சகோதரர்களே சாப்பிடுங்கள். இதை உங்களுக்குச் சகோதரர் பிரான்சிஸ் அனுப்பினார். அவர் என்னைப் போல் அல்லாமல் மிகவும் நல்லவர். என்னை மன்னித்துவிடுங்கள்" என்றும் கூறினார்.

அவர்கள் சாப்பிடும்போது, அவர்களை நோக்கி "நீங்கள் மகிழ்ச்சி இல்லாமல் இருக்கிறீர்கள். இறைவனுக்கு ஊழியம் புரியுங்கள். உங்கள் அயலானை நேசியுங்கள் என்று சகோதரர் பிரான்சிஸ் சொல்லச் சொன்னார்" என்று கூறினார். அவர்கள் மூவரும் சகோதரர் பிரான்சிசைப் பார்க்க விரும்பி மடத்திற்கு வந்தனர். பிரான்சிஸ் அவர்களை அன்புடன் அழைத்து, அரவணைத்தார். அவர்கள் மூவரும் அப்பொழுது மனம் மாறி தங்களையும் சகோதரர்களாகச் சேர்த்துக் கொள்ளுமாறு அவரை வேண்டினர்.

**தொடரும்**




**கேள்வி எண் 18**

1) பிரான்சிஸ் எதற்காக வருத்தப்பட்டார்?
2) குண்டர்கள் சாப்பிடும் போது சகோதரர் அவர்களுக்கு என்ன கூறினார்?

**அனுப்ப வேண்டிய கடைசி திகதி : 10.03.2014**

**புனித பிரான்சிஸ் அசிசியின் தொடருக்கான விடைகளை எழுதி பாராட்டைப் பொறுபவர்கள்.**

1) அரேத்தா விக்டோரியா, தரம் 8F, திருக்குடும்பக் கன்னியர் மடம், பம்பலப்பிட்டிய
2) A.X ஆன் மார்டினா, தரம் 9, லூர்து அன்னை திருத்தலம், 206/1, பாலையூற்று, திருகோணமலை
3) ந. அனஸ்ரினா, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
4) ஷாமினி சிமியோன், தரம் 8F, திருக்குடும்ப கன்னியர் மடம், பம்பிலப்பிட்டி.

# வாழ்விலே ஒரு நாள்



ஒரு பதினைந்து வயதுப் பையன், தன் தந்தையுடன் காரில் விமானத்தளம் வழியாகப் பயணித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு பயிற்சி விமானம் சுழன்று சுழன்று இறங்கி, கடைசியில் அதன் மூக்கு தரையில் பட இறங்கியது. அப்போது காரிலிருந்த ஒரு சிறுவன், "டாடி.. டாடி.. காரை நிறுத்துங்கள்" என்று சொல்லவும் கார் நின்றது. காரிலிருந்து இறங்கி ஓடினான். கீழே விழுந்த அந்தப் பயிற்சி விமானத்திலிருந்த ஓட்டுநரை வெளியே இழுத்தான். அந்தச் சிறுவனின் கையிலேயே அந்த விமான ஓட்டி (மிகவும் இளவயதுக்காரன்) இறந்துபோக, மனதால் மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டான் அந்தச் சிறுவன்.

வீட்டுக்கு வந்ததும் தன் அம்மாவிடம், "அம்மா, அந்தப் பையனுக்கு இருபது வயதுதானிருக்கும். இத்தோடு அவன் வாழ்க்கை முடிந்துவிட்டதே!" என்று வருத்தப்பட்டுக் கூறினான். இரவு சாப்பாட்டை வேண்டாம் என்று சொல்லிவிட்டுப் படுக்கப் போய்விட்டான்.

அந்தச் சிறுவன் படிப்போடு, ஒரு மருந்துக் கடையில் பகுதி நேரப் பணியாளனாக வேலை பார்த்து வந்தான். அதில் கிடைக்கும் சம்பளத்தை அப்படியே விமானப் பயிற்சி பற்றிய விவரங்களைச் சேகரிப்பதிலும், கற்றுக்கொள்வதிலும் செலவிட்டான். விமானம் ஓட்டுவதற்கான லைசென்ஸ் பெற முயன்ற அவனது லட்சியம் பதினாறாவது வயதில் ஈடேறியது. அந்தப் பையன் வேறு யாருமல்ல, நிலாவில் முதல் காலடி பதித்த நீல் ஆர்ம்ஸ்ட்ராங்தான்.

## தெரிந்து கொள்ளுங்கள்

- குருதி ஒருமுறை உடல் முழுவதையும் சுற்றிவர எடுக்கும் நேரம் : *30 செக்கன்கள்*
- சூரியனை முதன் முதலாக ஒளிப்படம் பிடித்தவர் : *ஜீன் போசோல்ட் ஆமன்ட் பிசோ (1845)*
- சுருக்கெழுத்து முறையை அமைத்தவர் : *சேர் ஐசக் பிற்மன்*
- கின்னஸ் புத்தகம் வெளியிடப்பட்டது : *லண்டனில்*
- உலகில் கடற்கரை இல்லாத நாடுகளின் எண்ணிக்கை : *26 நாடுகள்*

**ஆக்கம் :**


**கோடன் E. சிறில், தரம் – 7T, புனித பேதுரு கல்லூரி, பம்பிலப்பிட்டி**



நிரோஜிகா.
புதுச்செட்டித்தெரு பங்கு



J. கெலிஸ்டர். தரம் - 5B.
நு/சேன் போர்ட் கனிஷ்ட கல்லூரி, நானுஓயா




நெ. பிரிட்டோ பெரி.
தரம் -10T.
புனித பேதுரு கல்லூரி



கோசலா.
புதுச்செட்டித்தெரு பங்கு

# ஓவியச் சாதனையாளர்கள்

- இயேசுவின் ஓவியங்களைப் "படுவா" என்ற இடத்தில் ஏரினா தேவாலயச் சுவர்களில் தீட்டிப் பெரும்புகழ் பெற்றவர் இத்தாலிய ஓவியரான சியோட்டோ
- புகழ் பெற்ற "மோனாலிஸா" மற்றும் இயேசுவின் "கடைசி விருந்து" ("லாஸ்ட் சப்பர்") ஓவியங்களை வரைந்தவர் லியோனார்டோ டாவின்சி.
- ரோம் நகரில் சிஸ்டின் தேவாலயத்திலுள்ள புகழ்பெற்ற ஓவியங்களை வரைந்தவர் மைக்கல் ஏஞ்சலோ.
- முதன் முதலில் மனித உடலின் வடிவத்தை வரைந்தவர் ஹாலந்தைச் சேர்ந்த ரெம்ப்ராண்ட்
- "க்யூபிஸம்" எனப்படும் ஓவியப் பிரிவின் தந்தை எனப்படுபவர் பால் செஸான்
- "இம்ப்ரெஷனிஸிஸம்" எனப்படும் ஓவியப் பிரிவின் தந்தை எனப்படுபவர் கிளாட் மோனே
- இயற்கைப் படம் வரையும் குழுவின் தந்தையென அழைக்கப்படுபவர் பிரான்சிஸ் பால் கொகான்
- நவீன ஓவியப் பிதாமகர் என வர்ணிக்கப்படுபவர் ஸ்பெயின் நாட்டவரான பிகாஸ்ஸா
- ஓவியர்களுக்கெல்லாம் ஓவியர் என்று போற்றப்படுபவர் வெலாஸ்தவஸ்
- மியூரல் மற்றும் கண்ணாடி ஓவியங்களை வரைந்தவர் மார்க் ஷகால்

## சுடோக்கு – புதிர் விளையாட்டு இல 01

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | | | 7 | | | | |
| 6 | | | 1 | 9 | 5 | | | |
| | 9 | 8 | | | | | 6 | |
| 8 | | | | 6 | | | | 3 |
| 4 | | | 8 | | 3 | | | 1 |
| 7 | | | | 2 | | | | 6 |
| | 6 | | | | | 2 | 8 | |
| | | | 4 | 1 | 9 | | | 5 |
| | | | | 8 | | | 7 | 9 |

## விளையாடும் முறை

விதி 1: ஒன்பது சிறு கட்டங்கள் அடங்கிய ஒவ்வொரு சதுரத்திலும் 1 முதல் 9 வரையுள்ள எல்லா எண்களும் ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்கவேண்டும் இப்படியாக இதே முறையில் ஏனைய கட்டத்திலும் அமைய வேண்டும்

விதி 2: கட்டம் முழுவதிலும் ஒவ்வொரு வரிசையிலும் (கிடையிலும்) 1 முதல் 9 வரையுள்ள எண்கள் ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இதேபோல ஒவ்வொரு நெடையிலும் எண்கள் 1 முதல் 9 வரை ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும்.

**விடை அடுத்த இதழில்....**

## விளையாடும் முறை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 4 | 6 | 7 | 8 | 9 | 1 | 2 |
| 6 | | | | | | | | |
| 1 | | | | | | | | |
| 8 | | | | | | | | |
| 4 | | | | | | | | |
| 7 | | | | | | | | |
| 9 | | | | | | | | |
| 2 | | | | | | | | |
| 3 | | | | | | | | |

# எச்சரிக்கையுடன் முகம் காட்டுவதே நல்லது.




பேஸ்புக் தெரியுமா உங்களுக்கு? தெரியா-விட்டால் இந்த நூற்றாண்டில் வாழத் தகுதியற்றவர். இளைஞர் கூட்டம் ட்விட்டர் பரிச்சயம் இல்லை என்றால் நீங்கள் இந்தக் காலத்துக்கு ஒத்து வராத ஆள் என்கிறார்கள். இந்த சமூக வலைத்தளங்கள்தான் இன்றைய தகவல் பரிமாற்றத்தின் முதுகெலும்பு.

அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் மற்றும் பிரபலமானவர்கள் போன்ற பரபரப்பாக இயங்குபவர்கள் கூட சூடான செய்திகளை ட்விட்டரில் தான் தருகிறார்கள். அவர்களைப் பின்தொடராமல் விட்டால் ஆறிப்போன தகவல்கள்தான் நமக்குக் கிடைக்கும். இன்னும் சில காலத்தில் நம்மூர் கிராமத்தினரும் ட்விட்டரிலும் பேஸ்புக்கிலும் கணக்கு வைத்திருப்பார்கள். அந்த அளவுக்கு இந்த வலைத் தளங்கள் செல்வாக்குப் பெற்று வருகின்றன.

பேஸ்புக்கின் பெயரைத்தான் முகநூல் என்று மொழியாக்கம் செய்திருக்கிறது தமிழ்கூறும் நல்லுலகம். காலையில் பல் துலக்கிவிட்டேன் என்பது முதல் ஒபாமா வீட்டு நாய்க்குட்டிக்குக் காய்ச்சல் என்பது வரை உலகின் எல்லா நிகழ்வுகளையும் அறிவிப்பதற்கு இந்த இணையத்தளம் பயன்படுத்தப்படுகிறது. நான் வருத்தமாக இருக்கின்றேன் என்று பேஸ்புக்கில் கண்ணீர் வடித்தால், உலகத்தின் பல மூலைகளிலிருந்தும் ஆறுதல் வருகிறது. நமது பண்பாட்டைச் சிறையாக நினைக்கும் புதிய தலைமுறையினர் இந்த வசதிகளை நன்றாகவே பயன்படுத்திக் கொள்கின்றார்கள்.

பருவநிலை மாற்றத்திற்கு எதிராகவும், மீனவர்களுக்கு ஆதரவாகவும் தெருக்களில் போராட்டம் நடக்கிறதோ இல்லையோ ட்விட்டரிலும், பேஸ்புக்கிலும் கண்டிப்பாக நடக்கும். ஸ்பெக்ட்ரம் முறைகேடும், எகிப்து எழுச்சியும் காரசாரமாக விவாதிக்கப்படும். பி.டி. கத்தரிக்காய் வேண்டாம் என்றும், அரசுக்கு கண்டனம் தெரிவிக்கப்படும். கையெழுத்து இயக்கம் கூட நடக்கும். இதெல்லாம் அரசின் காதுகளை எட்டுமா என்று அசட்டுத் தனமாக கேட்கக்கூடாது. இது நவீன போராட்டக் களம் என நினைத்துக் கொண்டு அமைதியாகப் போய்விட வேண்டியதுதான்.

சட்டங்களுக்கு இங்கு வேலை இல்லை. நாட்டின் இறையாண்மைக்கு எதிராகப் பேசினால் தேசியப் பாதுகாப்புச் சட்டம் பாயும். மதகுருமார்களை கேலிச் சித்திரமாக வரைந்தால் ஆண்டுக் கணக்கில் தண்டனை கிடைக்கும். நீதிமன்றத்தை அவமதித்தால் சிறைக்குச் செல்லவேண்டும். இதுதான் பொதுவான சட்டம். சில மேற்கத்திய நாடுகள் பேஸ்புக்கில் எழுது-வதைக் கண்காணிக்கின்றன. வீதிமீறல்கள் இருந்தால் தண்டிக்கின்றன. ஆனால் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இன்னும் அந்த அளவுக்கு விழிப்புணர்வு இல்லை. இங்குள்ள வலையுலகம் இதையெல்லாம் பொருட்படுத்துவது இல்லை. எல்லோரும் திட்டப்ப-டுகிறார்கள். எல்லாமே விமர்சிக்கப்படுகின்றன. அந்த அளவுக்குச் சுதந்திரம் இருக்கிறது.

இந்தச் சுதந்திரம் இப்போது எதிர்மறையாகப் பயன்படுகின்றது. பேஸ்புக்கில் கணக்கு வைத்திருப்-போரின் தனிப்பட்ட தகவல்கள் எந்த அளவுக்குப் பாதுகாக்கப்படுகின்றன என்பது குறித்து அவ்வப்போது கேள்வி எழுப்பப்படுவதுண்டு. அண்மையில் பேஸ்புக் நிறுவனரின் கணக்கையே இணையக் குறும்பர் யாரோ திருடி, கண்டனச் செய்தியை வெளியிட்டார். இது சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவோர் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இணைய வலைத்தள ஜாம்பவானுக்கே இந்தக் கதி என்றால், அவரை நம்பிக் கணக்கு வைத்திருக்கும் கோடிக்கணக்கானோரின் நிலை குறித்து கவலை எழுந்தது.

இப்போது இன்னொரு விவகாரம். பேஸ்புக் கணக்கு வைத்திருப்போரில் பெரும்பாலானோர் தங்களது தனிப்பட்ட வகையிலான புகைப்படங்களை தளத்தில் வெளியிடுகின்றனர். அதுவும் தங்களைப் பற்றிய சுயவிவரக் குறிப்பில் இருக்கும் முகப்புப் புகைப்படம் மிகவும் பிரபலம். தன்னம்பிக்கை இல்லாதவர்கள்தான் முகத்தை மறைத்துக் கொள்வார்கள் என்று தத்துவம் வேறு சொல்லப்படுகின்றது. இந்த முகப்புப் புகைப்படத்தை யார் வேண்டுமானாலும் பார்க்கலாம். பொதுவெளியில் காணக்கிடைக்கும் இது தவிர புகைப்படத் தொகுப்பும் இருக்கும். இப்போது இந்தப் புகைப்படங்கள் எல்லாம் திருடப்படுவது அம்பலமாகியிருக்கிறது. இந்தப் புகைப்-படங்களைத் திருடி அப்படி என்ன செய்துவிட முடியும் என்கிறீர்களா?

தற்போது பேஸ்புக்கில் உள்ள புகைப்படங்களைத் திருடி ஆபாசமான டேட்டிங் இணையத்தளம் ஒன்று வெளியிட்டிருக்கிறது. "லவ்லி ஃபேஸஸ்" என்கிற அந்த இணையத்தளம் சுமார் 2.5 லட்சம் பேரின் பேஸ்புக் முகப்பு புகைப்படங்களை திருடியிருப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறது. இந்தப் புகைப்படங்கள் அனைத்தும் முக உணர்வை அடை-யாளங் காணும் மென்பொருளின் உதவியுடன் வகைப்படுத்தப்பட்டு இவர் இப்படிப்பட்டவர், இவருடன் டேட்டிங் செல்ல அணுகவும் என்கிற ரீதியில் சேவை அளிக்கிறது. இதில் ஆண்கள், பெண்கள் என வித்தியாசம் இல்லாமல் எல்லோரின் புகைப்படங்களும் இடம்பெற்றிருக்கின்றன. சமூக வலைத்தளங்களின் கட்டுப்பாடுகளை உடைத்து அனைவரையும் இணை-க்கும் முயற்சி இது என்று இந்த டேட்டிங் இணைய-தள உரிமையாளர்கள் தங்களது செயலை நியாயப்-படுத்தியிருக்கிறார்கள்.

ஆனால், ஒரு டேட்டிங் இணையத்தளத்தில் தனது படம் இடம்பெறுவதை, அதுவும் தன்னுடைய அனுமதியே இல்லாமல் இடம்பெறுவதை யாரும் விரும்பமாட்டார்கள். என்ன தான் அத்துமீறுதல், கட்டுடைதல் போன்ற நவீன மரபுகள் உருவாகிக் கொண்டிருந்தாலும், இச்சமூகம் இவற்றை உள்வாங்கிக் கொள்வதற்கு இன்னும் சில காலம் பிடிக்கும். அதுவரையில் ஃபேஸ்புக்கில் எச்சரிக்கையுடன் முகம் காட்டுவதே நல்லது.

## வாழ்க்கை

ஓர் எறும்புக்கு முன்னால் எந்தத் தடைகளை நீங்கள் வைத்தாலும் அது அடியில் சென்றோ அல்லது மேலால் சென்றோ, அல்லது சுற்றிச் சென்றோ தடைகளை கடக்கும். கவனித்துப் பாருங்கள். தடைகளை உடைப்பதற்கு எறும்புகள் காலத்தை விரயம் செய்து அழியவில்லை. தடைகளை அங்கேயே விட்டு அவை முன்னேறுகின்றன.

"மனித வாழ்க்கையில் கடவுளைத் தவிர, தவறாதவன் எவனுமில்லை
மன்னிப்பது மறப்பது இறைவனின் செயல் – ஆனால்
மனதில் வைத்து பழிவாங்குவது மனிதனின் செயல்"

# மன்னிப்பு

ஒரு விவசாயி பக்கத்து வீட்டுக்காரரை அவதூறாக பேசிவிட்டார். பிறகு தனது தவறை உணர்ந்து மன்னிப்பு வேண்டுவதற்காக ஒரு குருவானவரிடம் சென்றான். அந்தக் குருவானவர் அவரிடம் ஒரு பை நிறைய இறகுகளை கொடுத்து எடுத்துப்போய் நகரின் நடுவில் கொட்டிவிட்டு வருமாறு சொன்னார். விவசாயியும் அவர் சொன்னபடியே செய்தார். பிறகு அந்தக் குருவானவர் அவரை திரும்பப் போய் அந்த இறகுகளை சேகரித்து வரும்படிக் கேட்டுக் கொண்டார். அந்த விவசாயி என்னதான் முயற்சித்தாலும், அவரால் அவ்வாறு செய்ய முடியவில்லை. ஏனென்றால் இறகுகள் எல்லாம் பறந்து போய் விட்டன. அவன் வெறும் கையுடன் திரும்பினான். அந்த குரு "இதுவே, உனது சொற்களுக்குப் பொருந்துவதாகும். நீ அவற்றை வெகு சுலபமாய் எறிந்து விட்டாய். ஆனால் உன்னால் அவற்றைத் திரும்பப் பெற முடியாது. ஆகவே உனது சொற்களைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் கவனமாக இரு" என்றார்.

இந்த நிகழ்வின் ஊடாக நம்முடைய இதமான சொற்கள், கனிவான பார்வை, வளமான வார்த்தை, துடிப்பான இதயம், இவைகளை விடுத்து நம்முடைய வார்த்தைகளால் பிறர் மனதை புண்படுத்தாது மகிழ்வோடு மன்னிப்போம்.

**ரசித்துப்பார் அழகு தெரியும்!**
**ருசித்துப்பார் சுவை தெரியும்!**
**நுகர்ந்துபார் மணம் தெரியும்!**
**கேட்டுப்பார் இசை தெரியும்!**

### மறந்து பார் மன்னிப்பின் அர்த்தம் புரியும்


செடியில் பூக்கும் பூ மனம் வீசினால் தான் அதன் வாசனை தெரியும். மனித வாழ்க்கையும் அப்படித்தான். மன்னிப்பு என்ற பூ மனதில் மலர்ந்தால்தான் மனிதத்தின் அர்த்தம் புரியும்

### மன்னிப்பின் தத்துவம்

**மன்னிப்பு :**

* அது ஒரு இனிமையான இசைக்கருவி. இசைக்க தெரிந்தவனுக்கு மட்டுமே சங்கீதம் கேட்கும்.
* அது ஓர் அருமையான கண்ணாடி. கையாளத் தெரிந்தவனுக்கு மட்டுமே முகத்தைக் காட்டும்.
* அது ஓர் இனிமையான அனுபவம். வாழ்வை சுவைக்கத் தெரிந்தவர்களுக்கு மட்டுமே இனிமை தரும்.
* அது ஓர் அழகிய கோலம். புரிந்து கொள்ளாதவனுக்கு மட்டுமே சிக்கலாகத் தோன்றும்.

தனக்கு எவ்வளவு தான் துன்பம் இழைத்த போதும் பல்வேறு விதமான இன்னல்களுக்கு உள்ளானபோதும் அகிலத்தையே படைத்து காத்து வந்த கடவுளுக்கு சிலுவை மரணம் வந்தபோதும், மன்னித்து அனைவரையும் தம் பிள்ளையாக ஏற்று அன்பு செய்தவர் இயேசு. இன்னும் அன்பு செய்து வருகின்றவர். ஆகவே அவரால் படைக்கப்பட்ட நாம் ஒவ்வொருவரும் நம்மை வெறுப்பவர்களையும், துன்புறுத்த நினைப்பவர்களையும் மறந்து மன்னிக்கப் பழகுவோம். நம் மனதைப் பக்குவப்படுத்துவோம்.



**நீ பறிக்க முயன்றால் உனக்கு ரோஜா தான் தெரியும்.**
**முட்கள் தெரியாது!**
**நீ எடுக்க முயன்றால் உனக்கு முத்துதான் தெரியும்.**
**கடலின் ஆழம் தெரியாது!**
**நீ நடக்க முயன்றுவிட்டால் உனக்கு பாதை தான் தெரியும்.**
**தடுக்கும் கற்கள் தெரியாது!**
**நீ மறக்க முயன்றுவிட்டால் உனக்கு மனம்தான் தெரியும்.**
**வலி தெரியாது**

ஆகவே,

**என்றும் உறவிற்கு கரங்கள் உண்டு.**
**பிரிவுக்கு பாரங்கள் உண்டு.**
**இசைக்கு சுரங்கள் உண்டு**
**இல்லாமைக்கு இரங்கல் உண்டு**
**இனிமைக்கு தளங்கள் உண்டு**
**இதயத்திற்கு வரங்கள் உண்டு**
**மறப்பதற்கு என்றுமே மனங்கள் உண்டு**
**மனதிற்கு உயிர் உண்டு**

எனவே, உயிர் உள்ள வரை பிறரை மன்னித்து மறப்போம், பிறந்த குழந்தையின் மனம்போல, புறாவின் கபடற்ற மனம்போல, பனியின் வெண்மையைப் போல நாமும் மன்னிப்பு என்பதை இந்த தவக்காலத்தில் நம்முடைய அன்றாட வாழ்வில் செயல்படுத்தி மகிழ்வு கொள்வோம்.

**இன்பத்தை Inbox இல் வை**
**துன்பத்தை Outbox இல் வை**
**கோபத்தை Delete பண்ணு**
**புன்னகையை Send பண்ணு**
**மனதை Vibration பண்ணு**
**மன்னிப்பை SMS பண்ணு**

**வாழ்க்கையே உனக்கு Ringtone** ஆக மாறும். எனவே மன்னிப்பதனால் நாமும், நம்மோடு உள்ள அனைவரும் மகிழ்வோடு நம்மை பார்த்து அயலவரும் வளர உந்து சக்தியாக திகழ்வோம். மன்னிப்பை மனதில் ஏற்று இயேசுவின் உயிர்ப்பு விழாவை மகிழ்வோடு வரவேற்போம்.



04

# ஆலய வரலாறுகள்

லா சலேத்து என்பது ஒரு குக்கிராமம். பிரான்சு நாட்டின் தென் கிழக்குப் பகுதியில் ஆல்ப்ஸ் மலைச் சாரலில் உள்ளது. இது கிரெனோபிள் மறைமாவட்டத்தைச் சேர்ந்தது. இங்குதான் அன்னையின் காட்சி அருளப்பட்டது. தூய சலேத் அன்னையின் காட்சி மாக்சிமின் ஜிரோ என்ற 11 வயது சிறுவனுக்கும், மெலானி மத்தியூ என்ற 14 வயது சிறுமிக்கும் அருளப்பட்டது.

# சலேத் மாதா



1846ஆம் ஆண்டு புரட்டாதி 19ஆம் திகதி வியாகுல அன்னையின் திருவிழா நாளில் இந்த இருவரும் ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும்போது அன்னையின் காட்சி அவர்களுக்குக் கிடைத்தது. இருவரும் ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டு இருந்தார்கள். இருவரும் தாங்கள் கொண்டு வந்த மதிய உணவைச் சாப்பிட்டு விட்டு அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். திடீரென மெலானி கண் விழித்துப் பார்த்தபோது அங்கே மாடுகளைக் காணவில்லை. உடனே அவள் மாக்சிமினை எழுப்பி “மாடுகளைக் காணவில்லை” என்றாள். உடனே தாங்கள் கொண்டுவந்த பை, மீதியான ரொட்டித் துண்டுகளை அங்கேயே போட்டுவிட்டு இருவரும் மாடுகளைத் தேடிச் சென்றார்கள். மலைச்சாரலில் உள்ள ஒரு வளைவில் அவற்றைக் கண்டுபிடித்து மகிழ்ந்தனர்.

பின் தாங்கள் உணவு அருந்திய இடத்தில் வைத்துவிட்ட பை, மீதியான ரொட்டித் துண்டுகளைப் பத்திரப்படுத்தி வைப்பதற்காக மெலானி முன்னே சென்று கொண்டிருந்தாள். இந்த நேரத்தில்தான் வற்றிக் கிடந்த நீர்ச்சாரலில் ஒரு கல்மீது ஒளிப்பிழம்பாக அன்னையின் காட்சி அருளப்பட்டது. இதைப் பார்த்தவுடன் சிறுமி மாக்சிமினைப் பார்த்து ஓடி வரும்படி சப்தமாக அழைத்தாள். அவனும் வந்து சேர்ந்தான். இந்நேரத்தில் மெலானி மெய்மறந்தவளாகக் காணப்பட்டாள். அவள் கையிலிருந்த கோலானது தன்னையறியாமல் கீழே விழுந்தது. இந்த நேரத்தில் மாக்சிமின் அந்தக் கோலை கையில் எடுத்துக் கொடுத்துவிட்டு “இதை அப்படியே இறுக்கமாகப் பிடித்துக் கொள், ஒருவேளை அந்த ஒளிப்பிழம்பு நமக்கு ஏதாவது தீங்கிழைக்க முன்வந்தால் அதை ஒரே அடியாக ஓங்கி அடித்து விடலாம்” என்றான். மேலும் அந்த ஒளிப்பிழம்பிற்குள் ஒரு கல்லை எறிந்து என்ன நடக்கும் என்று பார்ப்போமா என்று கேட்க, அவள் “வேண்டாம்” என மறுத்துவிட்டாள்.

இருவரையும் மனக்கலக்கமும், பயமும் ஆட்கொண்டன. அந்த ஒளிப்பிழம்பை பார்த்த வண்ணமாகவே இருவரும் இருந்தார்கள். அது அதிகமாகப் பிரகாசித்து பின் உருண்டையாகி பிளவுபட அதிலிருந்து அன்னை வெளிப்பட்டார். சேயை இழந்த தாயைப்போல, தான் பாலூட்டி வளர்த்த மக்களால் விரட்டியடிக்கப்பட்டவரைப் போல சோகத்தோடு கல்மீது அமர்ந்து, கைகளால் முகத்தை மறைத்துக் கொண்டு துயருற்று அழுத வண்ணம் காட்சியளித்தார்.



பேரச்சம் இருவரையும் மேலிட அன்னை பிள்ளைகளை அணுகி **"என் மக்களே, அருகில் வாருங்கள், பயப்பட வேண்டாம், பெரிய செய்திகளை உங்களுக்குச் சொல்ல வந்திருக்கிறேன்"** என்று சொல்லி இருவரையும் திடப்படுத்தினார். அன்னை வெண்ணிற அங்கி, வெண்ணிற மிதியடி, வெண்ணிற முக்காடு ஆகியவற்றை அணிந்திருந்தார். தன் கைகளை மார்போடு சேர்ந்து சிலுவை வடிவில் வைத்திருந்தார். பாடுபட்ட சுரூபமானது அவரது கழுத்தில் தொங்கவிடப்பட்டிருந்தது. அதன் இடதுபுறம் ஒரு சுத்தியலும், வலதுபுறம் கொறடும் (சிலுவையில் ஆணியை அடிக்கவும், பிடுங்கவும் பயன்படுத்தப்பட்ட சாதனங்கள்) இருந்தன. அவர்கள் இக்காட்சியைத் திறந்த கண் மூடாது பார்த்துக் கொண்டிருந்தனர்.

அப்போது சொல்ல வேண்டிய செய்தியைச் சொல்லிவிட்டு தேவ அன்னை சிறுவர்களை நோக்கி **"என் மக்களே, இவை யாவற்றையும் என் மக்கள் அனைவருக்கும் அறிவியுங்கள்"** என்று சொன்னார். அவர் மறைவதற்கு முன்னர் அவரது முகத்தை இன்னுமொரு முறை கண்டுகளிக்க வேண்டும் என்கிற ஆசையோடு அந்த இரு பிள்ளைகளும் சற்று முன்வந்து அன்னையைப் பார்த்தார்கள். அந்த நேரத்தில் அவரது சோக முகமானது மாறி முகத்தில் மகிழ்ச்சி ததும்பியது.



மேலே செல்வதற்கு முன்பாக அவர் தென்கிழக்கு திசையை நோக்கி அதாவது உரோமையை நோக்கி ஒரு பார்வை பார்த்தார். அது துயரம் நிறைந்த பார்வையாக அமைந்திருந்தது. பின் சற்று தூரம் போய் வானத்தையே நோக்கியவராய் பூமியிலிருந்து மூன்று அடி உயரம் எழும்பினார். அப்போது ஒளி வளையம் ஒன்று அவரைச் சூழ்ந்து கொண்டது. பின்பு அது அன்னையை தன்னகத்தே உள்வாங்கிக் கொண்டு வானத்தைத் துளைத்துச் சென்று மறைந்து விட்டது.

குழந்தைகள் நடந்த நிகழ்ச்சிகளை தெளிவோடும், உறுதியோடும் ஊருக்கு வந்து எடுத்துரைத்தனர். அவர்கள் இருவரும் கூறியவற்றை பலர் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த இடத்தில் தரிசிக்கச் சென்ற சிலர் அழுது கொண்டிருந்த அன்னையின் பாதம் வைத்த இடத்தில் நீரூற்று கிளம்பியிருப்பதைக் கண்டு பெருமகிழ்வுற்றனர். அன்னை கூறிய செய்திகளை 1851இல் திருத்தந்தை 9ஆம் பயஸ் அவர்களிடம் ஒப்படைத்தார் மெலானி. கார்த்திகை 16, 1851இல் திருச்சபை சலேத் அன்னையின் காட்சியை ஏற்று அங்கீகரித்தது.

மேக்சிமின் 1875 பங்குனி 1லும், மெலானி 1904 மார்கழி 15லும் இறைவனடி சேர்ந்தனர். அன்னை அழுதுகொண்டு பெரும் துயருடன் தோன்றி வெளிப்படுத்திய இரகசியங்கள் இவைதான்

1) **பிரான்சின் நான்கில் மூன்று பகுதி விசுவாசத்தை இழக்கும்**
2) **உலக அமைதிக்குப் பெரும் சவால்கள் ஏற்படும்**
3) **மீண்டும் திருச்சபை விசுவாசத்தில் நிலை பெறும்.**

1996ஆம் ஆண்டு வைகாசி மாதம் 6ஆம் திகதி திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் எழுதிய மடலில் இவ்வாறு கூறுகின்றார். “சலேத் அன்னையின் செய்தி நம்பிக்கையின் செய்தியாகும். ஏனெனில், நமது நம்பிக்கை மனுக்குலத்தின் தாயாகிய அன்னை மரியாவினால் உறுதி செய்யப்படுகிறது”

மனமாற்றம், விசுவாசம், பிறரன்பு, இறைவேண்டல், சேவை போன்ற பண்புகளால் மானிட வாழ்வு சிறக்க வேண்டும் என்ற அன்னையின் செய்தி திருச்சபைக்கும், உலகிற்கும் என்றுமே தேவைப்படுகின்ற செய்திதான். உலகில் வாழும் மானிடர் யாவரும் இறைவனின் பிள்ளைகளாக அன்பில் வாழவேண்டும்.





**வரலாறு தொடரும்...**

# பெண்கள் மகிழ்ச்சியுடன் இருக்க....?

※ சூழ்நிலைக்கேற்ப அனுசரிக்கப் பழகிக் கொள்ளுங்கள். அதற்காக உங்கள் நோக்கத்தைக் கைவிட வேண்டியதில்லை.

※ வெளிப்படையாகப் பேசுங்கள். ஆனால் முரட்டுத்தனம் வேண்டாம். துணிவுடன் இருங்கள். ஆனால் எதிர்ப்புணர்வைக் காட்டாதீர்கள்.

※ தொடர்ந்து கடுமையாக உழையுங்கள்... விட்டு விட்டு உழைப்பதில் பலனில்லை.

※ ஏதாவது ஒன்றில் விசேஷமான திறமை பெறுங்கள். அதற்காக உங்களை குறுக்கிக் கொண்டு தெளிவை இழக்க வேண்டியதில்லை.

※ எழுத்திலும் பேச்சிலும் திறமையினை வளர்த்துக் கொள்ளுங்கள். வெறும் வார்த்தை ஜாலங்களில் ஈடுபடாதீர்கள்.

※ அடிப்படைகளையும், விவரங்களையும் தனித்தனியாகப் பிரித்துக் கொள்ளுங்கள். செயலுக்குத் திட்டமிடுங்கள். அதே சமயம் விவரங்களை அலட்சியப்படுத்தாதீர்கள்.

※ மனித இனத்தில் நம்பிக்கை வையுங்கள். தன்னம்பிக்கையுடன் இருங்கள். ஏமாளியாகவோ, தலை கர்வத்துடனோ இருக்காதீர்கள்.

※ மனதில் சித்திரம் உருவாக்கி முன்கூட்டியே திட்டமிடுங்கள். உடனடியான எதிர்காலத்தை மறந்து நீண்ட எதிர்காலத்திற்குத் திட்டமிடாதீர்கள்.

※ மரியாதைக் குறைவினையோ, வெறுப்பையோ வளர்த்துக் கொள்ளாதீர்கள். வேலையை நேசியுங்கள். அதுவே முழு திருப்தியை அளிக்கும். முயற்சியை வளர்த்துக் கொள்ளுங்கள். சிறிய குழிகள்தான் பெரிய பள்ளங்களாகின்றன. துணிவுடன் நேர்மையுடன் இருங்கள். கஷ்டங்களைக் கடக்க அது உங்களுக்கு உதவும்.

# அதிசயதகவல்கள்

✷ நீல நிற கண்களை உடையோருக்கு மற்றவர்களை விட இரவில் பார்வைத் திறன் துல்லியமாக இருக்கும்.

✷ ஒரு மணி நேரம் காதில் இயர்போன் அணிந்து பாட்டு கேட்கும்போது, காதில் உள்ள பக்டீரியாக்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்கின்றது.

✷ வலது கைப்பழக்கம் உள்ளவர்கள் இடது கைப்பழக்கம் உடையவர்களை விட சராசரியாக ஒன்பது வருடங்கள் உயிர் வாழ்கிறார்கள்.

✷ ஒரு முறை புன்னகை புரிவதன் மூலம் குறைந்த பட்சம் 30 தசைநார்களுக்கு பயிற்சி கிடைக்கிறது.

✷ நமது மூக்கு நமது உடலில் ஒரு குளிர்சாதனப் பெட்டிபோல் இயங்குகின்றது. இது உடலுக்குள் செல்லும் குளிர் காற்றை வெப்பப்படுத்தி அனுப்புகின்றது. சூடான காற்றை குளிரச் செய்து அனுப்புகிறது. மேலும் காற்றில் உள்ள மாசுக்களை தடுத்து தூயகாற்றை உள்ளே அனுப்பும் வடிகட்டியாகவும் மூக்கு செயல்படுகிறது.

✷ நமது மூளையானது சக்தி வாய்ந்த கணணியை விட பல மடங்கு சக்தி வாய்ந்தது. மூளை 100 பில்லியன் நரம்பு செல்களால் உருவானதாகும்.

✷ மனிதன் இறக்கும்போது முதலில் அவனின் கேட்கும் திறனையே இழக்கின்றான்

✷ நமக்கு மகிழ்ச்சி அளிக்கும் செயல்களை பார்க்கும் போது நமது விழித்திரையானது சாதாரண நிலையைவிட 45சதவீத அளவில் விரிந்து விடுகின்றது.

✷ நாம் நமது கழுத்தை அசைக்கும்போது டிரிக் என ஏற்படும் சத்தமானது நைட்ரஜன் வாயுக் குமிழ்கள் எரிக்கப்படுவதால் உண்டாகின்றது.

✷ மனித உடலில் இரத்த ஓட்டம் இல்லாத பகுதி எது தெரியுமா? கண்ணின் கருவிழி. ஏனென்றால் கருவிழி அதற்குத் தேவையான ஒக்ஸிஜனை காற்றிலிருந்து நேரடியாகப் பெற்றுக் கொள்கிறது.....

***சிலுவைப்பாதை...*** அது பாடுகளின்
முகவரியை எழுதிய வெற்றுப்பேனா முனையல்ல.
மாறாக வரலாற்று சிற்பத்தை செதுக்கிய இயேசு என்னும்
கலைஞனின் கையில் உள்ள மீட்பு உளி.
அது வரலாற்றை வகுத்தெடுத்த சமானியனின் வீரப் பயணம்
உலக மீட்புக்காக தன்னுயிரை துச்சமெனக் கருதிய
உலக மீட்பரின் மீட்புப் பயணம்.
***சாவோடு*** ஒரு சகாப்தம் முடிந்துவிட்டது என்று
எண்ணியவர்களுக்கெல்லாம் தன் சிலுவைச் சாவையே
புதிய சகாப்தத்தை எழுதிய நாசரேத்தூர்
இயேசுவின் இறுதிப் பயணம்.
***சிலுவைப் பாதை*** வெறும் பக்தி முயற்சியல்ல.
மாறாக நம்மைப் பக்குவப்படுத்தும் புதிய பாடம்.
சிலுவைப் பாதை வெறும் வரலாற்று நிகழ்ச்சியல்ல மாறாக
மானிட குலத்தையே புனிதப்படுத்திய செந்நீர் தீர்த்தம்.
***கறைப்படிந்த*** இதயங்களை
தூய்மைப்படுத்தவும் தவறிய வாழ்வை சரிசெய்யவும்.
உடைந்துபோன உறவுகளைப் புதுப்பிக்கவும். அழைக்கும்
வாழ்க்கை வழிதான் இந்தச் சிலுவைப் பாதை எனவே
சிலுவையை சுமக்கும் இயேசுவிடம் நம் வாழ்வில் நாம்
பிறருக்காக சுமைத்தாங்கிகளாக மாறி அன்றாட வாழ்வில்
மாற்றம் கண்டு உருக்கமாக
இச்சிலுவைப் பாதையின் வழி நடப்போம்.

## முதலாம் நிலை

### இயேசு தீர்ப்பிடப்படுகிறார்

தீர்ப்பிடாதீர் தீர்ப்புக்கு உள்ளாகுவீர் என்றீர். தீர்ப்பிட்டு தீங்கிழைத்தேன் இறைவா. தீர்ப்பிடாமல் மீட்பளிக்க நான் வந்தேன் என்றீர். இனிமேல் நான் பிறர் குறையை பேசமாட்டேன் இறைவா.

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## இரண்டாம் நிலை

### இயேசு மீது சிலுவை சுமத்தப்படுகிறது

சிலுவைகளைச் சுமந்து உம்மைப் பின்தொடரச் சொன்னீர். சிலுவைகளை ஏற்கவில்லை இறைவா. எனக்காக என் சிலுவையை சுமந்திட்ட இறைவா. இனி உமக்காக பிறர் சிலுவை சுமப்பேன்.

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## மூன்றாம் நிலை

### இயேசு முகம் குப்புற விழுகிறார்

அகந்தையும், வெறுப்பும் வீழ்ந்துவிடும் என்றீர். அதில் தடுக்கி விழுந்தேன் இறைவா. கீழ்ப்படிந்து மன்னித்து மனிதர் எம்மை மீட்டீர். இனிமேல் அதை வாழ்ந்து எழுந்திடுவேன் இறைவா

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## நான்காம் நிலை

### மரியா தன் அன்பு மகனை சந்திக்கிறார்

பெற்றோரைப் பராமரித்து அன்புக் காட்டச் சொன்னீர். மதிக்கவில்லை. உதவவில்லை இறைவா. பெற்றோருக்கு பல ஆண்டுகள் கீழ்ப்படிந்து வாழ்ந்தீர். எனவே நானும் உம்மைப்போல கீழ்ப்படிவேன் இறைவா

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## ஐந்தாம் நிலை

### இயேசுவுக்கு உதவுகிறார் சீமோன்

பிறர் சுமைகள் சுமந்து உதவ வேண்டும் என்றீர். பிறர் சுமை -கள் சுமக்கவில்லை இறைவா. உம்மோடு மகிழ்வுடன் சுமை ஏற்றவர் சீமோன். இனி அவர்போல் உதவிடுவேன் இறைவா.

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## ஆறாம் நிலை

### வெரோணிக்கா இயேசுவின் முகத்தைத் துடைக்கிறார்.

துன்புறும் மனிதரின் துயர் துடைக்க அழைத்தீர், தூரம் விலகிச் சென்றேன் இறைவா, உமது முகம் துடைத்திட்ட வெரோணிக்கா போல நானும் இனி பிறர் துயரத்தை துடைத்திடுவேன் இறைவா.

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**




## ஏழாம் நிலை

### இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்

இனிமேல் நீர் பாவங்களை செய்யாதீர் என்றீர். மறுபடியும் அதில் விழுந்தேன் இறைவா. என்னை மீட்க இரண்டாவது முறையாக விழுந்தீர், நானும் உம்மைப்போல் புது வாழ்வு வாழ எழுவேன்.

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## எட்டாம் நிலை

### எருசலேம் பெண்களுக்கு இயேசு ஆறுதல் கூறுகிறார்.

அழுவோருக்கு ஆறுதல் வழங்கு என்று சொன்னீர். பிறர் அழுவதற்குக் காரணமாய் இருந்தேன். எருசலேம் பெண்களின் கண்ணீர் துடைத்தீர் உம் வழியில் நானும் பிறர் கண்ணீர் துடைத்திடுவேன் இறைவா.

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## ஒன்பதாம் நிலை

### மூன்றாம் முறையாக இயேசு கீழே விழுகிறார்

எத்தனை முறை வீழ்ந்தாலும் எழுந்து விடு என்றீர், சோர்வடைந்து போய்விட்டேன், இறைவா, மூன்றாம் முறை விழுந்தாலும் துணிவு கொண்டு எழுந்தீர், நானும் உம்மைப்போல எழுந்து நடக்க துணிவு கொள்வேன் இறைவா.

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## பத்தாம் நிலை

### இயேசுவின் ஆடையை களைகிறார்கள்

இறைவனைப் போல் தூயவராய் வாழ வேண்டும் என்றீர். பாவத்திலே வாழ்கிறேனே இறைவா. என் பாவ ஆடையை நீர் கல்வாரியில் களைந்தீர். ஆதலால் தூய வாழ்வை அணிந்துக் கொள்வேன் இறைவா.

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## பதினோராம் நிலை

### இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்

பழைய இயல்பை சிலுவையில் அறைந்துவிட்டேன் என்றீர். பழைய இயல்பில் வாழ்கிறேன் இறைவா. அறையப்பட்ட உடலின் இச்சை அழித்துவிட்டதென்பதால் நான் ஆவிக்குரிய வாழ்வு வாழ்வேன் இறைவா.

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**



## பன்னிரண்டாம் நிலை

### இயேசு சிலுவையில் உயிர் விடுகிறார்

உம் இறப்பில் உம்முடனே பங்கேற்க அழைக்கிறீர். பங்கேற்க மறுத்துவிட்டேன் இறைவா. இறப்பவர்க்கே உயிர்ப்பு உண்டு என்பதை நீர் சொன்னீர். எனவே உயிர்ப்பு வாழ்வை வாழ்ந்திடுவேன் இறைவா

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## பதின்மூன்றாம் நிலை

### இயேசு அன்னையின் மடியில்

இறுதி மட்டும் நிலைத்திருந்து மீட்புப் பெற அழைத்தீர் இடையிடையே மறுதலித்தேன் இறைவா பிறந்த போதும், இறந்தபோதும் மடியில் உம்மை சுமந்த மரியாபோல உம்மை சுமப்பேன் இறைவா

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## பதினான்காம் நிலை

### இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார்

பாவ வாழ்வை பொறுத்தமட்டில் இறந்துவிட்டாய் என்றீர், பாவ வாழ்வை புதைக்கவில்லை இறைவா. எனவே கல்லறையில் எம் பாவம் புதைத்துவிட்டு உமது உயிர்ப்பிலே பங்கேற்பேன் இறைவா

**இரக்கமே உருவான இறைவா, பாவி என்னை மன்னியும்.**

## "வாழ்வுக்கென நாற்பது நாள் செபம்"



**"வாழ்வுகக்கென நாற்பது நாள் செபம்"** என்ற முயற்சியை தென் கொரியத் திருத்தல திருச்சபை திருநீற்றுப் புதனன்று தொடங்குகின்றது. 1973ஆம் ஆண்டு தென் கொரிய அரசு உருவாக்கிய கருக்கலைப்பு சட்டத்தை தடைசெய்யும் கருத்தடன் பங்குனி 5ஆம் திகதி திருநீற்றுப் புதனன்று அனைத்து கத்தோலிக்கக் கோவில்களிலும் நாற்பது நாள் செப முயற்சிகள் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாசி, பங்குனி ஆகிய இரு மாதங்களில் கொரியத் திருத்தல அவை வாழ்வை நிலைநாட்டும் பல செயல் திட்டங்களை மேற்கொண்டு வருவதாக குனைநள செய்திக் குறிப்பொன்று கூறுகின்றது. 4 கோடியே 87 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட தென்கொரியாவில், ஒவ்வோர் ஆண்டும் 3,40,000 பெண்கள் கருக்கலைப்பு செய்து கொள்கின்றனர் என்ற விவரத்தை அரசு வெளியிட்டுள்ளது. இருப்பினும் அங்கு நடைபெறும் கருக்கலைப்புக்கள், ஏறத்தாழ 15 இலட்சம் என்று தலத் திருச்சபை கூறிவருகின்றது.




## துன்பங்களை அனுபவிக்கும் வேளைகளில் நம்பிக்கை இழக்காமல் செயல்படுங்கள்"

"நோயுற்றிருப்போர் அனைவரும், குறிப்பாக அதிக துன்பங்களை அனுபவிக்கும் வேளைகளில் நம்பிக்கை இழக்காமல் செயல்படுங்கள். இயேசு கிறிஸ்து உங்கள் அருகில் உள்ளார்" என்று கடந்த வாரம் லூர்து அன்னை திருவிழாவன்று திருச்சபையில் சிறப்பிக்கப்பட்ட உலக நோயாளர் தினத்தன்றும், நோயுற்றோருக்கான சிறப்பான செபங்களுக்கு அழைப்புவிடுத்த திருத்தந்தை பிரான்சிஸ், பங்குத்தள சந்திப்பின்போதும் மாற்றுத்திறனாளிகளையும், நோயுற்றோரையும் தனியாகச் சந்தித்து உரை வழங்கினார்.

## முத்திப்பேறு பெற்ற திருத்தந்தையர் 23ஆம் ஜோன், 2ஆம் ஜோன்பால் உருவங்கள் பதிக்கப்பட்ட தபால் முத்திரைகள்



முத்திப்பேறு பெற்ற திருத்தந்தையர் 23ஆம் ஜோன் அவர்களும், 2ஆம் ஜோன்பால் அவர்களும் சித்திரை 27, ஞாயிறன்று புனிதர்களாக உயர்த்தப்படவிருக்கும் தருணத்தையொட்டி, அவர்கள் உருவங்கள் பதிக்கப்பட்ட தபால் முத்திரைகள் வருகிற பங்குனி 21ஆம் திகதி வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தை 1962ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் தொடங்கி, திருச்சபையின் புத்துணர்வைக் கொணர்ந்த திருத்தந்தை 23ஆம் ஜோன் அவர்கள், "நல்ல திருத்தந்தை ஜோன்" என்று மக்களால் புகழப்பட்டு, 1963ஆம் ஆண்டு ஆனி 3ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார். கத்தோலிக்க திரு அவையை மூன்றாவது மிலேனியத்திற்குள் அழைத்து வந்த திருத்தந்தை 2ஆம் ஜோன்பால் அவர்கள், வேறு எந்த திருத்தந்தையும் மேற்கொள்ளாத அளவு திருப்பயணங்களை உலகெங்கும் மேற்கொண்டு, மக்களை குறிப்பாக இளையோரை பெருமளவில் கவர்ந்தவர். 15 இலட்சம் என்ற எண்ணிக்கையில் அச்சிடப்படும் திருத்தந்தை 2ஆம் ஜோன்பால் அவர்களின் தபால் முத்திரைகள், வத்திக்கானிலும், போலந்து நாட்டிலும் ஒரே நேரத்தில் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## பெக்கட் (Packet) உணவுகளால் ஆபத்து



பெக்கட்டுக்களில் அடைத்து விற்கப்படும் உணவுகள் ஆபத்தை விளைவிக்கும் என பிரித்தானியாவில் மேற்கொள்ளப்பட்ட அண்மை ஆய்வு ஒன்று எச்சரித்துள்ளது. உணவுப் பொருட்களை பெக்கட்டுக்களில் அடைக்கும்போது அவற்றை பாதுகாப்பாக வைப்பதற்கும், பதப்படுத்துவதற்குமென பார்மால்டிஹைடு என்ற வேதிப்பொருட்கள் சேர்க்கப்படுகின்றன என அந்த ஆய்வு கூறுகிறது. தாகத்தை தணிப்பதற்காக குடிக்கும் குளிர்பானங்களை சேமிக்கும் பிளாஸ்டிக் போத்தல்கள் மற்றும் சாப்பாட்டு மேசையில் உள்ள தட்டுக்கள் போன்ற பொருட்களில் பார்மால்டிஹைடு வேதிப்பொருள் சிறிய அளவில் சேர்க்கப்படுகின்றது எனவும் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். இது தவிர உணவைப் பாதுகாக்கப் பயன்படுத்தப்படும் வேதிப்பொருட்களின் எண்ணிக்கை நான்காயிரத்தை தாண்டும் எனவும் தற்போது உணவுப் பொருட்கள் பொதி செய்யப்படுவது அதிகரித்து வரும் நிலையில் அது குறித்த விழிப்புணர்வை மக்களிடம் கொண்டு சேர்ப்பது அவசியம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து இடங்களிலும் பரவலாக காணப்படும் இந்த வேதிப்பொருட்கள் புற்று நோயை உருவாக்கும் தன்மை கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது

# திருத்தந்தை உள்ளத்தில் ....

"இவ்வுலகை இன்னும் நீதி நிறைந்த உலகமாக மாற்றும் முயற்சிகளில் கத்தோலிக்கர்களும், யூதர்களும் இணைய வேண்டும்."

"இயேசுவின் அருள்வாக்கு மட்டுமே நம்மைச் சோதனையிலிருந்து விடுதலையளிக்கின்றது."

"அன்பிருக்கும் இடத்தில் மன்னிக்கும் மனப்போக்கு இருக்கிறதா என சிந்திப்போம்"

"புறணி பேசுவது, மனிதரைக் கொல்லும் வலிமையுடையது"

"பிரமாணிக்கமும், பயனும் நிறைந்த திருமணம் மகிழ்ச்சியைக் கொண்டுவரும்."

"துன்பங்களை அனுபவிக்கும் வேளைகளில் நம்பிக்கை இழக்காமல் செயல்படுங்கள்"

## உலகப் பெண்கள் தினம் பங்குனி 08

இந்நன்நாளிலே...

நெருடல்களும், நெருக்கடிகளும்
நெரும்புகோல் - உன்னை பண்படுத்தி
உன்பளுவினை தெளிவாக்கும் திறமைகளின்
தேர்வுதான் பயப்படாதே பலசாலியே..

கண்ணுக்குள் வேலியிடும்
குரங்குத் தின கொடூரங்கள்
தூக்குத் தண்டனை தொடுவானம் - தூணும்
உன்னைத் துரத்தி பார்க்கும் - துவளாதே

உறவாளியாக விழித்திரைகளில்
மனுமகனாய் உலாவந்து
மங்களமாய் பேசி உருப்படாதவனென்ற
மா பாதக கேலிப்புயல்களாய்
மாண்டிடாதே விடையாக வா

கரையான்களும், குப்பைகளும்
சகட்டு மேனிக்கு உலவும் சமூக வெளியில்
உன்னையே பிடுங்கி எறியும்
பிணந்தின்னி கழுகுகளாய் மனித அனுபவங்கள்

மங்களப் பெண்ணே மண்தட்டி
நிமிர்ந்து நில்
மரபு மேடைக்குள் மண்டியிடாதே
கண்ணகியின் கற்பித்தலை
முளை நாளென்று
கண்ணீர் அஞ்சலிக்கு
சவால் விடு
இந்நன்நாளிலே...

# வாய்விட்டுச் சிரிப்பது புனிதராவதற்கான விரைவு வழி

தென் இத்தாலியைச் சேர்ந்த பிரான்சிஸ் பசானி என்பவர் அடிக்கடிச் சொல்லும் வார்த்தை, "வாய்விட்டுச் சிரிப்பது, புனிதராவதற்கான விரைவு வழி" என்பதாகும் அதையே தன் வாழ்விலும் கடைப்பிடித்த பசானி, எப்போதும் மகிழ்ச்சியுடனே இருந்தார். தன் 14ஆம் வயதிலேயே பிரான்சிஸ்கன் துறவு சபையில் இணைந்து 10 ஆண்டு படிப்பிற்குப்பின் குருவானார். குருமாணவர்களுக்கு ஆசிரியர், இல்லத் தலைவர், சபையில் மாநிலத்தலைவர், நவதுறவியர் தலைவர் என பல பதவிகளை வகித்தாலும், ஏழைகளைச் சென்று சந்தித்து அவர்களுக்கு உதவுவதையும் தன் சிறப்புப் பணியாகக் கொண்டிருந்தார். அனைவரையும் அரவணைத்துச் செல்வதில் வல்லவர். நம் ஆலோசனை வழங்குபவராகவும், போதகராகவும் திகழ்ந்தார் பசானி. இவர் போதனைகளுக்குச் செவிமடுத்து மனந்திரும்பியோர் எண்ணற்றோர். இவர் உயிரழந்தபோது, அந்த ஊரில் இருந்த சிறார்கள் அனைவரும் ஒன்றிணைந்து தெருவில் ஓடி "புனிதர் இறந்துவிட்டார்" எனக் கூக்குரலிட்டதாக வரலாற்றில் பதிக்கப்பட்டுள்ளது. சிறு குழந்தைகளே இவரை புனிதராக அறிந்திருந்தனர். இன்று திருச்சபையின் அடைக்கத்தின், அன்பின் மிகப்பெரும் எடுத்துக்காட்டாக விளங்குகிறார் புனித பிரான்சிஸ் பசானி.

## மருத்துவக் குறிப்புகள்



### வெயிலின் வெப்பத்தை சமாளிக்க



இளநீர் கோடை வெயிலுக்குச் சிறப்பான பானமாகும்.

இளநீருடன் எலுமிச்சை சாறு பருகினால் டைபாய்டு குணமாகும்.

வெள்ளை வெங்காயச் சாற்றுடன் கலந்து பருகினால் மலேரியா குணமாகும்.

இளநீர் உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும்

### தக்காளி



தக்காளி ஏழைகளின் ஆப்பிள்

தக்காளி சாறு ஆப்பிளை விட சக்திமிக்கது.

காலை, மாலை வேளைகளில் இதை அருந்தலாம்.

உடல் வலிமைப் பெறும்

ஊளைச் சதை குறையும் நீரிழிவு கட்டுப்படும்.

தக்காளிச் சாற்றுடன் தேன் கலந்து பருகி வந்தால் இரத்தம் சுத்தமாகும்.

தோல் நோய்கள் குணமாகும்.

### தோடம்பழம்



தோடம் பழம் சாறு எதிர்ப்புச் சக்தி தரும் எளிதில் ஜீரணமாகும்.

இதய நோய்களைக் குணமாக்கும் டைபாய்டு காய்ச்சல் தீரும்

தோடம் பழம் சாற்றுடன் இளநீர் கலந்து பருகினால் சிறுநீர் தடையின்றி வெளியேறும்.

தோடம்பழம் சாற்றுடன் எலுமிச்சை சாறு கலந்து பருகினால் நல்லது.

## 01ம் பக்கம் – புதிய கர்தினால்கள்...

உலகின் பல நாடுகளுக்கு அவர்களின் கருணை தேவைப்படுகின்றது" என்று திருத்தந்தை கூறினார். அத்தோடு "பாகுபாடு மற்றும் அடக்கு முறைகளால் துன்புறும் திருச்சபை சமூகங்கள் மற்றும் அனைத்து கிறிஸ்தவர்கள் உடனான தமது ஆன்மீக நெருக்கத்தை தெரிவிப்போம் என்றும் இம்மக்கள் விசுவாசத்தில் உறுதியாக இருக்கவும் தீமையை நன்மையால் வெல்லவும் அவர்களுக்கான நம் செபம் திருச்சபைக்கு தேவைப்படுகின்றது"

நம் சொல்லாலும், நம்பிக்கையாலும், செபங்களாலும் நம்பிக்கை ஏற்படுத்துபவர்களாக இருப்பதற்கு திருச்சபைக்கு நாம் தேவைப்படுகின்றோம். இக்காலத்தில் வன்முறை மற்றும் போர்களை அனுபவிக்கும் மக்களுக்கு அமைதியையும், ஒப்புரவையும் வேண்டுவோம் என திருத்தந்தை கூறினார்.

மாற்கு 10:32 என்ற இறைவார்த்தையை விளக்கிய திருத்தந்தை இயேசு எப்போதும் நமக்கு முன்பே போய்க்கொண்டிருக்கிறார். நமக்கு பாதையை காட்டுகிறார். இதுவே நம் நம்பிக்கை இயேசு சிலுவையின் பாதையை தேர்ந்து கொண்டார். அப்பாதை எளிதானதோ, அல்லது வசதியானதோ அல்ல ஆயினும் இயேசுவின் சீடர்கள் போன்று நாம் பயப்படத் தேவையில்லை. ஆகவே இயேசு நம்மை அழைப்பதற்கு நாம் அனுமதிப்போம். நாம் ஒன்றிணைந்து ஆண்டவருக்கு பின்னால் நடப்போம். விசுவாசிகள் மத்தியில் புனித தாய்த்திருச்சபை மத்தியில் நாம் எப்போதும் இயேசுவால் ஒன்றாக அழைக்கப்படுகின்றோம் என்று கூறினார் திருத்தந்தை. தொடர்ந்து கூறிய திருத்தந்தை, நாம் புனிதப் பாதையில் நடப்பதற்கு அழைக்கப்படுகின்றோம். அரசவைக்குள் அல்ல, மாறாக திருச்சபைக்குள் நுழைந்துள்ள புதிய கர்தினால்கள், நற்செய்தியின் வழியில் பேறுபெற்றோரின் செயல்பாட்டுடனும், புனிதத்துவப் பாதையிலும் நடைபோடவேண்டும் என்று கேட்டுக்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருச்சபையின் புதிய கர்தினால்களுடன் 23.02.2014 அன்று புனித பேதுரு பசிலிக்காப் பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றி, மறையுரை வழங்கிய திருத்தந்தை, சமூக அவைக்குள் இடம் பெறும் புறம்பேசுதல், பாகுபாடு பார்த்தல், வேண்டப்பட்டவர்களுக்கு மட்டும் உதவுதல் போன்ற தவறானச் செயல்பாடுகளைக் கைவிட்டு, திருச்சபைக்கு உரிய புனிதப் பாதையில் வழிநடக்குமாறு திருச்சபைத் தலைவர்களுக்கு அழைப்புவிடுத்தார். தம்மையே முற்றிலுமாக கையளிப்பவர்களாக, பகைவர்களையும் அன்புகூர்பவர்களாக, நம்மைத் தூற்றுபவர்களையும் ஆசீர்வதிப்பவர்களாக, தம்மையே முன்னிலைப்படுத்தாதவர்களாக, எளிமையானவர்களாக, நாம் அனுபவித்த அவமானங்களை மறக்கும் சக்தி கொண்டவர்களாக, தன்னையே பலியாக்கிய இயேசுவின் உணர்வுடன் வழிநடத்தப்படுவோமாக என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கர்தினால்களிடம் கேட்டுக்கொண்டார்

புனிதத்துவம் என்பது, உலகின் மீட்புக்கு இன்றியமையாத ஒன்று என்பதையும் எடுத்துரைத்த திருத்தந்தை, இறைவனின் திருக்கோயில் புனிதமானது. அந்தத் திருக்கோவிலே நீங்கள் என்று புனித பவுல் அடியார் கூறிய வார்த்தைகளையும் மேற்கோள் காட்டி, ஒவ்வொருவரும் புனிதராக வாழவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். திருக்கோவிலாக இருக்கும் நாம், அன்பென்னும் வழிபாட்டை நிறைவேற்றவேண்டும், அது அயலாருக்கு நாம் ஆற்றும் பணிகளையும் உள்ளடக்கியது என்று மேலும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## நன்றி நவில்தல்



**திருமதி. ஜெனவியுவ் பல்டானோ**

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 14.02.2014 அன்று நடைபெற்ற திருப்பலியிலும், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற விருந்துபசாரத்திலும் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

தகவல் : வேர்ஜினியா பெர்னாண்டோ, ஜோர்ச் பல்டானோ மற்றும் மருமக்கள், பேரப்பிள்ளைகள். (N 6530)

## 05ம் பக்கம் – தவக்கால நாட்காட்டி...

அநேக வேளைகளில் இறைவனை மறக்கின்றோம். எனவே, வாழ்வில் தோல்வியை தழுவிக் கொள்கிறோம்.

**செயல் :** உனது எதிர்கால திட்டங்கள் இறைவனுக்கு ஏற்றதாக உள்ளதா என்பதைப் பற்றி சிந்தித்துப்பார்

**செபம் :** "இறைவனை மறந்து வாழும் ஒருவருக்காகச் செபி".

**21.03.2014 – தவக்காலத்தின் 17ம் நாள்**

**வாசகங்கள்**

தொ.நூ 37:3-4.12-13.17-28 திபா 105:16-21

மத் 21:33-34.45-46

**சிந்தனை :**

பிறரின் வளர்ச்சியை கண்டு பொறாமைப்பட்டு, அவர்களுக்கெதிராக செயல்படுவது மனித பெலவீனத்தின் வெளிப்பாடாகும். ஆனால் பாதிக்கப்படுபவர்களை இறைவன் கைவிடாது, அவர்களுக்கெதிராக நாம் செயல்பட்டாலும், இறைவன் அவர்கள் சார்பாக செயல்படுகிறார்.

**செயல் :** ஒரு சந்தி இருந்து, அந்தப் பணத்தை பிறருக்காக செலவிடும் பொருட்டு சேகரித்து வை

**செபம் :** "பொறாமையின் காரணத்தினால் உனக்கெதிராக செயல்பட்டவனுக்காக செபி".

**22.03.2014 – தவக்காலத்தின் 18ம் நாள்**

**வாசகங்கள்**

மீக்கா 7:14-15.18-20 திபா 103:1-4.9-12

லூக் 15:1-3.11-32

**சிந்தனை :**

மனந்திரும்பி மன்னிப்புக் கேட்பவனை மன்னித்து ஏற்பது தான் இறைகுணம். கிறிஸ்தவனில் இருக்கவேண்டிய பண்பு. ஊதாரி மகன் உவமையில் வருகின்றவர்களில் யாரைப் போல் நான் இருக்கிறேன்? நான் இருக்கவேண்டியது அந்த தந்தையைப் போலவே

**செயல் :** பாவமன்னிப்பின் அருட்சாதனத்தைப் பெற்றுக்கொள்

**செபம் :** "தந்தை தம் பிள்ளைகள் மீது இரக்கம் காட்டுவது போல் ஆண்டவர் தமக்கு அஞ்சுவோர் மீது இரங்குகிறார்".

**23.03.2014 – தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு தவக்காலத்தின் 19ம் நாள்**

**வாசகங்கள்**

வி.ப 20:1-17 அல்லது 20:1-3.7-8.12-17 திபா 19:7-10 1கொரி 1:22-25 யோவா 2:13-25

**சிந்தனை :**

இயேசு நாம் தந்தையை எவ்வாறு வழிபட வேண்டும் என்பதை காட்டித் தந்தார். திருமுழுக்கின் மூலம் எம் அனைவரையும் தூய ஆவியானவர் குடியிருக்கும் ஆலயங்களாக மாற்றினார். உண்மையான வழிபாடு இறைவிருப்பத்தை நிறைவேற்றுவதாகும். அது பிறர் அன்பிலே நிறைவு பெறுகின்றது.

**செயல் :**

ஞாயிறு திருப்பலியிலே பங்கு கொண்டு, உன்னால் முடிந்த ஒரு பிறர் அன்பின் செயலை செய்

**செபம் :** "என் கற்பாறையும் மீட்பருமான ஆண்டவரே! என் வாயின் சொற்கள் என் உள்ளத்தின் எண்ணங்கள் உமக்கு உகந்தவையாய் இருக்கட்டும்".

**24.03.2014 – தவக்காலத்தின் 20ம் நாள்**

**வாசகங்கள்**

2சாமு 7:4-6.12-14.16 திபா 89:1-4.26.28

உரோ 4:13, 16-18.22 மத் 1:16.18-21.24

**சிந்தனை :**

இறைப் பணியாளர்களை மதிப்பதும், அவர்கள் வழிநடத்துதலின்படி நடப்பதும் கிறிஸ்தவ பண்பாகும். ஆயர், குருக்கள், துறவியர், பொதுநிலை தலைவர்களை மதிக்கிறேனா? அவர்கள் எனக்காக, எனது குடும்பம், சமூகத்திற்காக இறைவன் பெயரால் பணியாற்றுகிறார்கள் என்பதை உணருகிறேனா?

**செயல் :**

உனது பங்குத் தந்தைக்கோ அல்லது பொதுநிலைத் தலைவர்களில் ஒருவருக்கு உன்னால் இயன்ற ஒரு சிறு உதவியை செய்

**செபம் :** மறையாசிரியர்களுக்காக மன்றாடு.

தொடரும்

## 02ம் பக்கம் – தவக்காலம் மற்றும்...

**தவக்காலம் மற்றும் பாஸ்கு காலத்தை முன்னிட்டு நடத்தப்படும் போட்டிகளுக்கான விபரங்கள்**

❖ 03 - 05ஆம் தரம் வரை - சித்திரப் போட்டி (18 X 12 தாளின் அளவு)

**தலைப்பு :**

உருவாக்கப்பட்ட சட்டத்தைப் பாதுகாப்போம்.

❖ 06 - 09ஆம் தரம் வரை - கட்டுரைப் போட்டி ( கீழ்வரும் தலைப்புக்களில் ஒன்றை தெரிவு செய்து 75 சொற்களில் எழுதுக)

**தலைப்புக்கள் :**

1. களங்கமற்ற வாழ்க்கை வாழ்ந்த புனித மரியாள்
2. ஏழைகளை ஆதரித்த புனித திரேசாள்
3. ஆசியாவை ஆச்சரியத்திற்கு உள்ளாக்கிய அப்போஸ்தலர் தோமாவின் குழந்தை

❖ 10ஆம் மற்றும் 11ஆம் தரம் - கட்டுரைப்போட்டி (கீழ்வரும் தலைப்புக்களில் ஒன்றை தெரிவு செய்து 250 சொற்களில் எழுதுக)

**தலைப்புக்கள்**

1. மனித குலத்தை தூய்மைப்படுத்த பிறந்த பிறப்பு
2. "நான் உங்கள் பாதங்களை கழுவியதுபோல் நீங்கள் ஒவ்வொருவரின் பாதங்களைக் கழுவுங்கள்"
3. ஜீஸஸ் மற்றும் யூதாஸ் இன்னும் நம் மத்தியில் உள்ளனர்.
4. தொழில் நுட்பத்தில் மகுடம் தேடும் இன்றைய மக்கள் சபையில் எளியவரின் வாழ்க்கை எவ்வாறு இருக்க வேண்டும்.

❖ 12ஆம் மற்றும் 13ஆம் தரம் - கட்டுரைப்போட்டி (கீழ்வரும் தலைப்புக்களில் ஒன்றை தெரிவு செய்து 350 சொற்களில் எழுதுக)

**தலைப்புக்கள் :**

1. ஏழைகளின் சபையில் குழந்தை இயேசு சபையை காண விரும்புகிறேன்.
2. நான் தாகத்துடன் இருக்கிறேன்.
3. இம்முறையாவது நாம் அக்கறைக்கு செல்வோமா?
4. "உங்களிடையே பாவங்கள் செய்யாதவர் முதலில் கல்லெறியட்டும்"

இப்போட்டிகளின் முடிவுத் திகதி, சித்திரை 10, 2014

தகவல் : ஜோசப் ஜயசிறி பர்னாந்து

# இளைஞர்களின் கவனத்திற்கு...



இன்றைய இளைஞர்கள் சந்திக்கும் பெரிய பிரச்சினைகளில் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது முடி நரைத்தல். இந்தப் பிரச்சினை பரவலாகப் பல பேரை தாக்குகின்றது. முக்கியமாக இளம் வயது ஆண்களையும், பெண்களையும். வளர்ந்து வரும் ஒழுங்கற்ற வாழ்க்கை முறை மற்றும் இதர பல காரணங்களால் இன்றைய இளைஞர்களுக்கு மன அழுத்தம் ஏற்படுகிறது. அதனாலேயே அவர்களின் தலை முடியும் வேகமாக நரைத்து விடுகிறது.

இன்று பல இளைஞர்கள் சாம்பல் நிறம் முதல் வெண்ணிற இளநரை முடியுடன் சுற்றித் திரிவதை காண்கிறோம். இளநரை வருவதற்கு பல காரணங்கள் உள்ளது. பொதுவாக அடர்த்தியான, கருமையான முடி உதிரத் தொடங்கும்போது மெல்லிய வெண்ணிற முடி தெளிவாக தென்பட தொடங்கும். இப்படிக் கொட்டுவது சில மாதங்களுக்கு நீடிக்கும். ஆனால் திடிரென ஒரு இரவில் கொட்டிவிடும் முடிகளால் கூட இது ஏற்படலாம். நரைப்பதற்கு கூட ஓர் அமைப்பு உள்ளது.

ஆண்களுக்கு தாடியில் ஆரம்பிக்கும் நரை, பின் மீசைக்கு வந்து அங்கிருந்து தலையின் பகுதிகளுக்கு பரவும். நெஞ்சு முடி நரைக்க சில வருடங்கள் ஆகும். பெண்களுக்கோ உச்சந்தலையில் தொடங்கும் பின் இந்த நரை அப்படியே பிற இடங்களுக்கு பரவி, முதுமைத் தோற்றத்தைத் தரும். ஹார்மோன் சமமின்மை, கூடுதல் தைராய்டு சுரப்பிச் செயலாக்கம், தாழ் தைராய்டிசம், ஊட்டச்சத்துக் குறைவு, இரத்த சோகை, உணவுச்சத்துப் பற்றாக் -குறை, எலக்ட்ரிக் ட்ரையர் மற்றும் கடுமையான முடி சாயம் பயன்படுத்துவது, மரபியல் சார்ந்த கோளாறு, ஹீமோதெரபி, கதிர்வீச்சு என பல காரணங்களால் இந்தப் பிரச்சினை உண்டாகிறது.

எப்போது வேண்டுமானாலும் முடியானது நரைக்கும். சில நேரங்களில் 8 வயதான சிறுவர்களுக்குக் கூட லேசாக முடி நரைப்பதுண்டு. பின் அவர்கள் வளர வளர நரை முடியும் அதிகரிக்கும். மேலும் 25 வயதை கொண்ட பெண்கள் இந்த முடி நரைக்கும் பிரச்சினையைப் பற்றி அதிகமாக கவலை கொள்கிறார்கள். இது ஆண்களுக்கும் பொருந்தும். அதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளது.

முதல் காரணம் தவறான உணவு பழக்கங்கள். உணவில் சில வைட்டமின் "பி" இரும்புச்சத்து, தாமிரம் மற்றும் அயோடின் போன்றவற்றில் குறைபாடுகள் இருந்தால் இந்தப் பிரச்சினை ஏற்படும்.

இரண்டாவது மன கவலைகள், மன அழுத்தம் ஏற்பட்டால், தலை சருமம் கடுமையான டென்ஷ-னுக்கு உள்ளாகும். அது நல்ல முடிய வளர்ச்சிக்கு அளித்து வரும் ஊட்டச்சத்திற்கு தடையாக நிற்கும். இதுபோக மன அழுத்தம், இரத்த சோகை, ஆரோக்கியமற்ற தலை சருமம், தலை முடியைச் சரிவர பராமரிக்காமல் இருப்பது மற்றும் மரபியல் பிரச்சினைகளாலும் இளநரை உண்டாகிறது.

# தவக்கால திருயாத்திரை – திருச்சிலுவை ஆலயம்

## முன்னக்கரை, நீர்கொழும்பு




இவ்வருட தவக்காலத்தை முன்னிட்டு முன்னக்கரை திருச்சிலுவை ஆலயத்தில், திருச்சிலுவைப் பாதை, திருமணித்தியாலம், சிலுவை ஆராதனை, தவக்கால தியானங்கள் போன்ற சிறப்பு ஆராதனைகளை பங்கு ரீதியாகவோ அல்லது குழுக்களாகவோ செய்ய விரும்பினால் அதற்கான ஒழுங்கு முறைகள், ஆயத்தங்கள் போன்றவை செய்து தரப்படும். வருகைத் தர விரும்புபவர்கள் முன்கூட்டியே எம்மோடு தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்.



தொடர்புகளுக்கு.....
அருட்பணி. ஒனாசியஸ்
உதவிப்பங்குத்தந்தை
முன்னக்கரை, நீர்கொழும்பு
தொ.பே இல
075 – 5708692

(N6511)

---

## ஹொரனை கல்வாரி திருத்தலம் 2014

**தவக்கால வழிபாடுகள் : மாசி 05**

**விபூதிப்புதன் :** திருப்பலி மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் :** காலை 8.30 மணிக்கு திருச்சிலுவைப்பாதையும், காலை 10.00 மணிக்கு திருப்பலியும், சிங்களம், தமிழ் மொழிகளில் நடைபெறும்.

**பரிசுத்த வாரம் :**

சித்திரை 13 : குருத்தோலை ஞாயிறு மு.ப 10.00 மணிக்கு திருப்பலி சிங்களம், தமிழ் மொழிகளில் நடைபெறும்

சித்திரை 17: பெரிய வியாழக்கிழமை பி.ப 6.30 மணிக்கு திருப்பலி சிங்களம், தமிழ் மொழிகளில் நடைபெறும்.

சித்திரை 18 : பெரிய வெள்ளிக்கிழமை பொது சிலுவைப்பாதை பி.ப 1.30 மணிக்கு திருச்சிலுவை முத்தி, பி.ப 3.00 மணிக்கு நடைபெறும்.

சித்திரை 19 : அல்லேலூயா சனிக்கிழமை பி.ப 7.00 மணிக்கு திருப்பலி சிங்களம், தமிழ் மொழிகளில் நடைபெறும்.

சித்திரை 20 : உயிர்ப்பு ஞாயிறு காலை 8.30 மணிக்கு திருப்பலி நடைபெறும் இந்த வழிபாடுகளில் மட்டுமன்றி தங்களுக்கு விரும்பிய நாட்களிலும், நேரங்களிலும் திருச்சிலுவைப்பாதையும் திருப்பலியும் ஒப்புக்கொடுக்க ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

❋ **உணவு தேவைகளுக்கு மற்றும் மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.**

### ஹொரனை கல்வாரி திருத்தலத்திற்கான பாதை ஒழுங்கு



**கொழும்பு – ஹொரனை பாதை (பேருந்து இல. 120)**
ஹவலக் றோட் - பாமங்கடை - கொஹுவளை - பப்பலியான - பொரலஸ்கமுவ - பிலியந்தலை - கஸ்பாவ - பொல்கஸ்சோவிட்ட - பொக்குனுவிட்ட - சந்தியில் வந்து இடது பக்கம் திரும்பவும் களேதண்டுகொட புனித மார்ட்டீன் டி போறஸ் தேவாலயம்.

**கட்டுநாயக்க – ஹொரனை பாதை**
கட்டுநாயக்க - வத்தளை - கிரிபத்கொட - சபுகஸ்கந்த - பியகம - கடுவெல- ஹங்வெல்ல - பஹத்கம - மீப்பே - பாதுக்க ஸ்ரீ மொறகஹஹேன - ஹொரனை களேதண்டுகொட புனித மார்ட்டீன் டி போறஸ் தேவாலயம்.

**இரத்தினப்புரி – ஹொரனை :** இரத்தினப்புரி - கிரிஅல்ல - இங்கிரிய - ஹொரனை - களேதண்டுகொட புனித மார்ட்டீன் டி போறஸ் தேவாலயம்.

**மாத்தறை ஹொரனை பாதை :** மாத்தறை - காலி - களுத்துறை - பானந்துறை - பண்டாரகம - பொக்குனுவிட்ட - களேதண்டுகொட புனித மார்ட்டீன் டி போறஸ் தேவாலயம்.

**தக்ஷித்த லங்கா அதிவேக பாதை ஊடாக**
கொட்டாவையில் இருந்து - கெலனிகம ஊடாக வெளியேறி - இரத்தினப்புரி வீதி - பொக்குனுவிட்ட - களேதண்டுகொட - புனித மார்ட்டீன் டி போறஸ் தேவாலயம்

**காலியில் இருந்து** கெலனிகம ஊடாக வெளியேறி - இரத்தினப்புரி வீதி - பொக்குனுவிட்ட - களேதண்டுகொட - புனித மார்ட்டீன் டி போறஸ் தேவாலயம்

**உங்கள் அனைவருக்கும், தூய ஆவியானவரால் நிரம்பப்பட்ட தவக்காலமும், பாஸ்கா காலமும் அமைய இறைவனை மன்றாடுகின்றேன்**

பங்குதந்தை மற்றும் பங்கு மக்கள்

**அருட்தந்தை கனிசியஸ்நோரிஸ் அடிகள், தொ. பே. இல. 034-2261132, 071-4977061, திரு வினிடஸ் பர்னாந்து 077-8013411**

(Q13N8176)

---

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

| | 1 ½" x 1" single | 3" x 1"Double | 5" x 1" Trible |
|---|---|---|---|
| 1" | 350/= | 700/= | 1050/= |
| 1½" | 525/= | 1050/= | 1575/= |
| 2" | 700/= | 1400/= | 2100/= |
| 2½" | 875/= | 1750/= | 2625/= |
| 3" | 1050/= | 2100/= | 3150/= |
| 3½" | 1225/= | 2450/= | 3675/= |
| 4" | 1400/= | 2800/= | 4200/= |
| 4½" | 1575/= | 3150/= | 4725/= |
| 5" | 1750/= | 3500/= | 5250/= |
| 5½" | 1925/= | 3850/= | 5775/= |
| 6" | 2100/= | 4200/= | 6300/= |

| | பின் பக்கம் | உற்பக்கம் |
|---|---|---|
| ஆலயத் திருவிழா (திருத்தப்பட்டுள்ளது)<br>¼ பக்கம்<br>½ பக்கம்<br>முழுப்பக்கம் | <br><br>7750/=<br>15500/=<br>31000/= | <br><br>7000/=<br>14000/=<br>28000/= |
| வர்த்தக விளம்பரம் (திருத்தப்பட்டுள்ளது)<br>¼ பக்கம்<br>½ பக்கம்<br>முழுப்பக்கம் | <br><br>11500/=<br>23000/=<br>46000/= | <br><br>10000/=<br>20000=<br>40000/= |

வர்ணம் + 25 %

**திருமண சேவைகளுக்கு**

**1 தொடக்கம் 15 சொற்கள் வரை**

**ரூபா 500.00உம் தொடர்ந்து வரும் ஒவ்வொரு**

**சொற்களுக்கும் ரூபா 8.00 வீதமும் அறவிடப்படும்.**

## தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை
கொழும்பு - 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் - 0112692586
E-mail : colombocp@sltnet.lk
www.colombocatholicpress.com


அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை பீ.சீ.ஜீ எட்ரிச் றொட்ரிக்கோ, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்